பதினைப்பத் தீர்கைகையாகப் [பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

ஸ்தாபிதம் (1889 ஆவணியில் உதயமாகியது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம:— தாதுவஸ ஆனிமீ கூஉ (1936 ஜூன் 22) திங்கட்கிழமை { இலக்கம்—உக

## தொல்காப்பியமும் சைவ மதமும்

### உயர்திரு சுவாமி விபுலாநந்தா அவர்கள் விரிவுரை

"தோண்டர்படை ஏந்திச் செல்லும் ஆயுதம் ஞானவாள்; ஒலிக்கும் போர் முரசம் பிரணவ நாதப் பறை; அணிந்து செல்வது வெண்ணீற்றுக் கவசம்".

(முற்றொடர்)

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன்று மரபி னேனோர் பக்கமு
மறுவில் செய்தி மூவகைக் காலமு
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணு
மனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்."

பான்மை, ஊழ் என்பன ஒரு பொருட்சொற்கள். இதன் ஆற்றல் தெய்வங்களையும் கட்டுப்படுத்தத் தன்மைத்தாக இருக்கது தலைவன் தலைவியைக் கூட்டி வைக்கும் விதி (ஆணை)யின் வலி தெரிந்து கொள்ளற்பாலது.

"இனையி னீக்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்
ஈண்டு வினையின் நீங்கி என்பதற்கு இயல்பாகவே வினையினின்றும் நீங்கி என்பது பொருள். நூற்பொருளை விசாரிப்பதாலேயே வீடு பேற்றிற்கு மார்க்கமாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகப்பொருள், புறப்பொருள் என்ற நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன. அகம் என்பது ஒத்த அன்புடைய தலைவன் தலைவியின் கூட்டம். அது வீட்டகத்தே அல்லது இல்லின் கண்ணே நிகழ்வது; புறம் ஞானத்தைப் புகட்டுவது அது வீட்டிற்கு அல்லது ஊருக்குப் புறம்பே நிகழ்வது. ஞானம் இருள் கடிந்து ஒளி விளக்குவது போல் போர்க்களத்தில் வீரம் காட்டுவது. அன்பையும் அறிவையும் (ஞானத்தையும்) அகமும், புறமும் குறிக்கின்றன. இவ்வாழ்க்கை எப்படி வீட்டிற்கு மார்க்கமாகிறது என்பதையே அகப்பொருள் கூறுகிறது. தம்மிடமும் ஈசனிடமும் அன்பு இல்லாதவர்கட்கு மனைவி மக்கள், முதல் அன்புப்பொருள்கள். இல்வாழ்க்கையில் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. தம்மைப் பொறுத்துப் பிறபால் அன்பு பாராட்டுந்தன்மை போற்றத் தக்கது. உரை, செயல் முதலியவைகள் அன்பின் வளர்ச்சிக்குக் காரணம். பெற்ற சிற்றின்பமே பேரின்பத்திற்கு வழி.

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரிசுற்றமொடு கிழவனும் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே;'

என்பது தொல்காப்பியம். மனைவி மக்கள் பேரிலுள்ள அன்பு மாறி ஈசனிடம் செல்கிறது. அன்பின நிலைக்களம் மாறுகிறது. அன்பு வழக்கை காம் ஒன்றாகப் பயிலுதல் வேண்டும். "காமப்பகுதி கடவுளும் வரையாரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்" என்பது ஈங்குக் குறிக்கத் தக்கது.

தொல்காப்பியத்திற்குஇலக்கியமாக உள்ளவை திருவாசகம், திருக்கோவையார் என்ற சைவநூல்கள். திருக்கோவையார் மாணிக்கவாசகர் ஞானத்தில் அதியுச்சமாக இருக்கும் காலத்து இயற்றியதாகும். அந்நூலினின்றும் அகப்பொருள் தன்மையை இனிது விளக்கிக் காட்டும் ஒரு செய்யுளைச் சொல்லுகிறேன்:

"நீங்கரும் பொற்கழற்
சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமு
மெய்தினும் யான்மறவேன்
தீங்கரும் பும்அமிழ் தஞ்செத்தே
னும்பொதிந்துசெப்புங்
கோங்கரும்புந்தொலைத் தென்னையு
மாட்கொண்ட கொங்கைகளே"

திருக்கோவையார் அன்புக்குறைவிடம் என்று சொல்லலாம். புறப்பொருள் தன்மையை விளக்கத் திருவாசகத்தினின்றும் இரு பாக்கள் கூறுகிறேன். புறப்பொருளில் போர்க்குச் செல்வது குறிக்கப்படுகிறது. மணிவாசகப் பெருமான் பிரபஞ்சப் போருக்குத் திருப்படையெழுச்சியை மிக மிக அழகாக அருளியிருக்கிறார்

"ஞானவாளேந்துமையர்
நாதப்பறையறைமின்
மானமாவேறுமையர்
மதிவெண்குடைகவிமின்
ஆனநீற்றுக்கவசம்
அடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாம
மாயப்படைவாராமே.
தொண்டர்காள் தூசிசெல்லீர்
பத்தர்காள்சூழப்போகீர்
ஒண்திறல்யோகிகளே
பேரணிஉந்தீர்கள்
திண்திறல்சித்தர்களே
கடைக்கூழைசென்மின்கள்
அண்டர்நாடாள்வோம்நாம்
அல்லற்படைவாராமே.'

இப்படை யெழுச்சி எவ்வாறு, எதை நோக்கிச் செல்கின்றது? படையின் முன்னணியில் தொண்டர்களும், மருங்கில் பத்தர்களும், நடுவில் யோகிகளும், பின்னணியில் சித்தர்களும் செல்கிறார்கள். அவர்கள் ஏந்திச் செல்லும் ஆயுதம் ஞானவாள். அவர்கள் ஒலிக்கும் போர் முரசம் பிரணவநாதப் பறை. கவித்துச் செல்வது மதி வெண்குடை. அவர்கள் அணிந்து செல்வது திருவெண்ணீற்றுக் கவசம். இவர்கள் எதிர்த்துப் போர் செய்வது மாயப்படை, அல்லற்படை யென்பவைகளே. இவைகளை வென்றால் வானவூர் கொள்ளலாம்; அண்டர் நாடாளலாம். — "சித்தாந்தம்"

---

திருவாரூர் — பண்: இந்தளம்

ஊன்மிசை யுதிரக் குப்பை
யொருபொரு ளிலாத மாயம்
மான்மறித் தனைய நோக்க
மடந்தைமார் மதிக்கு மிந்த
மானுடப் பிறவி வாழ்வு
வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்
ஆனல்வெள் ளேற்ற வாநா
ரப்பனே யஞ்சி னேனே

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

---

## காங்கிரஸ் நகர நிர்மாண வேலை

### காந்திஜீ மேற்பார்வை

பூனா, ஜூன் 14—

மஹாராஷ்டிர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி கிர்தி என்றவிடத்தில் காங்கிரஸ் நகர் அமைக்க தகுதியான இடம் நிர்ணயிப்பதற்கு ஒரு கனிக்கமிட்டியை நியமித்தது. தனிக்கமிட்டியினர் சென்ற வாரம் பலவிடங்களுக்கும் சென்று கடைசியாக ஒரு இடத்தைப் பொறுக்கியெடுத்திருக்கின்றனர். அந்த இடம் 100 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது. அதில் 25 கிணறுகளிருக்கின்றன. ஸ்டீம் எஞ்சின் வைத்து மின்சார வசதிக்கு ஏற்பாடு செய்துகொள்ளலாம். மகாத்மா இந்தவூருக்கு ஒருமாதம் முன்னதாகவே வந்து தங்கியிருக்கப்போவதால் அவரையே காங்கிரஸ் நகர நிர்மாண வேலையைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்திருக்கின்றனர். இக் கமிட்டி ரிபோர்ட்டு சீக்கிரத்தில் வெளியாகும்.

---

## பாலஸ்தீனக் கலகம்

### சிப்பாய்களுக்குக் காயம்

ஜெரூசலம், ஜூன் 15—

பாலஸ்தீனத்தில் இன்னும் பயங்கர இயக்கம் நடைபெற்றுக்கொண்டுதானிருக்கிறது. கலகக்காரர் துப்பாக்கிப் பிரயோகத்தால் நுல்காரம் ஜெனின் என்னுமிடங்களுக் கருகில் இரு சிப்பாய்கள் பலத்தகாயமடைந்தனர். ஜாபாவிலுள்ள பிரிட்டிஷ் பொலிஸ் பாரக்ஸில் ஒரு வெடிகுண்டு போடப்பட்டது. ஆனால் அது வெடிக்கவில்லை.

---

## பெண் நோயாளியிடம் சேஷ்டையா?

கொழும்பு 16

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் வேலைபார்த்துவந்த தொழிலாளி ஒருவனைப்பற்றிய தகவலை அறிய பொலிசார் மிக்க கவனமாக வேலைசெய்து வருகிறார்கள். அவனைக் கடந்த சில தினங்களாகக் காணவில்லை. ஆஸ்பத்திரியில் சேர்வந்த ஒரு ஸ்திரீ வியாதியஸ்தரிடம் அவன் ஏதோ சேஷ்டைசெய்ய எத்தனித்ததாகவும் அவள் உடனே அதுபற்றி அதிகாரிகளுக்கு புகார்செய்ததாகவும் அது முதல் அவனைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

---

## கந்தபுராணக் கவி நுட்பம்

### கடவுள் வாழ்த்து

"பரமேசுவரன் கருணைமேலீட்டினால் வேண்டிய வேண்டிய காலங்களில் வேண்டிய வேண்டிய வடிவங் கோள்வர்"

திருவந்த தொல்லைப் புவனத்தோடு
தேவர் போற்றிப்
பெருவந் தனைசெய் தறிதற்கரும்
பெற்றி யெய்தி
அருவந் தனையு முருவந்தையு
மன்றி நின்றன்
ஒருவன் றனது பதந்தன்னை
யுளத்துள் வைப்பாம்

இ-ள்: சிறப்பு வாய்ந்த பழைய இப்பூவுலக வாசிகளும் தேவர்களும் துதித்து பெரிய வழிபாடுசெய்தும் உணர்ந்து கொள்ளுதற்கு இயலாத தன்மையைப் பொருந்தி அருவத்தன்மையையும் உருவத்தன்மையையும் அருவுருவத்தன்மையையும் நீங்கிநின்றருளும் ஏகநாயகராகிய சிவபரம்பொருளுடைய திருவடிகளைத் தமியேனுடை மனத்தில் இருத்துவாம் எ-று.

இத்திருவிருத்தத்தினால் இறைவனுடைய இயல்பான தன்மை கூறப்பட்டதாகும்.

மண்ணுலக வாசிகளும் விண்ணுலக வாசிகளும் பெருவந்தனை செய்யினும் அவனருளாலன்றி அவன்றன் வணங்குதல் இயலாதாகலின் "அறிதற்கரும் பெற்றியெய்தி" யென்றார். உளத்துள் வைத்தல் உறைக்கத் தியானித்தல். இறைவன் மேலே சொல்லப்பட்ட இயல்போடு கூடியவனென்பதை:

"சிவனருவுருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன் - பவமுதல் யோகபோகம் பண்ணிடுவானுமல்லன் - தவமுதலியோக போகந் தரிப்பவனல்லன்றனே - இவை பெறவியைந்து மொன்று மியைந்திட வியல்பினனே" என வருஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானும் உணர்தலாகும்.

எமது ஆசாரிய சுவாமிகள் இம் முதற் றிருவிருத்தத்திற் சிவபெருமானுடைய இயல்பான தன்மையை எடுத்துக்கூறி அதன்பின் புராணங்களிற் பெரிதும் எடுத்துச் சொல்லப்படும் திருவருள் வடிவங்களைத் தியானித்துத் துதிக்கின்றார். பரமேசுவரன் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு ஈடேறட்டும் என்னுங் கருணைமேலீட்டினால் வேண்டிய வேண்டிய காலங்களில் வேண்டிய வேண்டிய வடிவங் கொள்வாரென்பதை:-

"உருவருள் குணங்களோடும் உணர்வருளுருவிற்றோன்றுங் - கருமமும் அருளரன்றன் காரணுநிசாங்கம் - தரும்அருளுபாங்கமெல்லாம் தானருள் தனக்கொன்றின்றி - அருளுருவுயிருக்கென்றே யாக்குவன் அமலன்றனே" என வருஞ் சித்தியார்ச் செய்யுளானும் அறிதலாகும்.

(க)

ஊனாகி யுயிராகி யதனுள்நின்ற
வுணர்வாகிப் பிறவாகி யின்றுநாளை
வானாகி வளியாகி யழலாகி நீர்
மண்ணாகி... 

ஊனுகி யூனுளுயி ராயுயிர்
தோறுமாகி
வானுதியான பொருளாய் மதி
யாகி வேய்யோன்
தானுகி யாண்பெண் ணுருவாகிச்
சரா சரங்கள்
ஆனான் சிவன்மற் றவனீள்கழற்
கன்பு செய்வாம்

இ-ள் உடம்பாகியும் அந்த உடம்பின் கண்ணேயுள்ள ஆன்மாவாகியும் அவ்வான்மாக்கள் தோறும் வியாபித்திருக்கும் பரமான்மாவாகியும் ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களாகியும் சந்திரனாகியும் சூரியனாகியும் ஆண் பெண் வடிவங்களாகியும் இயங்கியற் பொருள் நிலையியற்பொருள்களாகியும் உள்ளவர் பரமசிவன்; அப்பரம் சிவத்தின் நிலைபெற்ற திருவடிகளிடத்து அன்பு வைப்பேம். எ-று:

பரமபதியே புருடனும் ஐம்பூதங்களும் சந்திரசூரியருமாகிய அட்டமூர்த்தியாவர்; இதனை:

"நிலனும்விசும்பாம்நிமிர்கால்நீர்தீயாம்
அலர்கதிராம்வான்மதியாம்அன்றி—மலர்
[கொன்றை
ஒன்னாறுந்தாரான்ஒருவன்இயமானனுமாய்
எண்ணிறந்தஎப்பொருளுமாம்"

என வருதலால் உணர்க. இவற்றுட்சீவர்களின் பதி ஊனெனவும் உயிரெனவும் உயிர்க்குயிரெனவும்மூன்றகக்கூறப்பட்டது புறப் பொருள்களும் உலகங்கள், அவற்றின்கணுள்ள அறிவில் பொருள்கள் அவற்றின் குணங்களென மூன்றகத் தொகுக்கப் பட்டன. சிவபிரான் இவ்வறுவகைப் பொருள்களிலும்வியாபகமாய் அவற்றின் வேறாகவும் நிற்பவரென்றபடி.

முதற்றிருவிருத்தத்திற் பரமபதி அறிதற்கரியவரெனவும் மனம்வாக்குகளுக்கு எட்டாதவரெனவுங் கூறியதனால், அப்படிப்பட்டவரைச் சிந்தித்து வழிபடுதல் சாலாதே யென்ற ஐயப்பாடு நேருமே யென்னும் ஏதுபற்றி, அப்படியன்று அந்த இறைவன் நமது உயிரோடும் உடம்போடும் சம்பந்தப்பட்டு இன்னின்ன நிலைமையில் நிற்றலால் நாம் அவனை வணங்குதல் வேண்டுமென்பதுங் புலப்பட, ஆசாரிய சுவாமிகள் இத்திருவிருத்தத்தில் இங்ஙனம் எடுத்து விளக்கினாரென்க. இது கடவுள்ஆன்மாக்களுக்கு அணிமையிலுள்ளார் என்பதை உணர்த்தியவாறும்

# சர்வதேசசங்கத்தின் கவலை.

## அங்கத்துவம் வகிக்கும் நாடுகள்

இத்தாலியின் துணிகரமான வெற்றியால் அபிஸீனியா மட்டும்தான் பாதிக்கப்பட்டதென் றெண்ண வேண்டாம். அதன் தாக்குதல், சர்வதேசசங்கத்தின் அங்கத்தவர்களான 58 நாடுகளையும் வருங்கால வாழ்வுத் துறையில் கவலையிலாழ்த்திவைத்து விட்டது. இத்தாலியானது சர்வதேசசங்கத்தின் பல அறிக்கைகளையும் எச்சரிக்கைகளையும் மீறியே, அபிஸீனியாவைத் தாக்கி ஏகாதிபத்தியத் திமிரை வெளிப்படுத்தியதென்பது உலகறிந்த விஷயம். எனவே, இத்தாலி சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் 58 நாடுகளின் ஆணைகளையும் துச்சமென மதித்த தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொண்டதென்பது வெளிப்படை. இதன் காரணமாக அபிஸீனியா வீழ்ச்சியுற்று நசித்துப் போனது ஒருபக்கமிருக்க அத்தகைய அநீதிகளுக்குப் பொறுப்பாளிகிட்டமற்ற நாடுகளும வருங்காலக் கவலை பெரிதும் கொண்டிருக்கின்றன.

சர்வதேச சங்கத்தின பெயரையும் அதில், பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி, அபிஸீனியா, துருக்கி, இந்தியா, எகிப்து முதலிய நாடுகள் முக்கியஸ்தானம் வாய்ந்தவை யென்பதை நம்நாட்டவர் அறிவர். ஆயினு அதில் அங்கத்துவம்வகிக்கும் 58நாடுகளின் பெயர்களை நம்மவர் பெருபாலோர் அறியார். ஆகவே அவற்றின்பெயர்களைக் கீழேதருகிறோம்:—

(1) ஆப்கானிஸ்தான், (2) அல்பானியா, (3) அர்ஜெண்டைன், (4) ஆஸ்டிரிலியா, (5) ஆஸ்டிரியா, (6) பெல்ஜியம் (7) பொலிவியா, (8) பிரிட்டன்; (9) பல்கேரியா, (10) (11) கனடா, (12) சில்லி (13) சீனு (14) கொலம்பியா, (15) கியூபா, (16) செக்கோஸ்லேவாகியோ, (17) டென்மார்க், (18 டொமேனிகா, (19) அக்வடோவர், (20) எஸ்தோனியா, (21) கௌதமாலா (22) அபிஸீனியா, (23) பண்ணிலாண்டு (24) பிரான்ஸ் (25) யூனன்—கிரேக் (26) ஸ்பாதகி, (27) ஹீண்டூராஸ் (28) ஹங்கேரி, (29) இந்தியா, (30) பர்ஷியா, (31) இராக் (32) அயர்லாந்து, (33) இத்தாலி (34) லத்வியா, (35) லாய்பேரியா, (36) லித்துவேனியா (37) லக்ஸம்பர்க் (38) நியூஜீலந்து, (39) மெடிசாரகோ, (40) நார்வே, (41) மெப்பாமா, (42) பாருவே, (43) போலந்து, (44) போர்த்துக்கல் (45) ருமேனியா, (46) ஸெல்வடோர்; (47) ஸயாம் (48) ஸ்பெயின், (49) ஸ்வீடன், (50) ஸ்விட்சர்லாந்து, (51) துருக்கி. (52) ருஷ்யா, (53) பாருவே, (54) வெனிஸ்வெலா (55) பேரோவ் (56) ஜூகோஸலேவியா.

## அபாஸ் தயாப்ஜியின் அரியசேவை

### பம்பாயில் அநுதாபக்கூட்டம்

அபாஸ் தயாப்ஜியின் மரணத்தை முன்னிட்டு இன்று மாலையில் பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் காலஞ் சென்ற அப்பாஸ்தயாப்ஜி அவர்களது மரணத்தைக் குறித்து அநுதாபக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்தில் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு அவர்கள் அப்பாஸ்தயாப்ஜீ அவர்கள் தேசத்தின் முன்னேற்றத்திற்கான பல துறைகளிலும் விலை மதிக்க முடியாத ஊழியம் புரிந்திருக்கிறார் என்றும் அவரது எதிர் பாராத மரணத்திற்கு இந்தக் கூட்டம் மிகவும் வருந்துகிறதென்றும் அவரது மரணத்தால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு இந்தக் கூட்டம் தனது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது என்றும் ஓர் தீர்மானத்தைப் பிரேரித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

அதன்பின்னர் ஸ்ரீமதி சரோஜினி தேவியார், தயாப்ஜியை அரும்பெருங் கிழவர் என்று குறிப்பிட்டு அவர் பாஞ்சாலத்தில் நடந்த அட்டூழியங்களைப் பற்றிவிசாரணை நடத்திய கமிட்டியிலும் பர்டோலி சத்தியாக்கிரக சமயத்தில் சர்க்கார் புரிந்த அக்கிரமங்களைப்பற்றி விசாரணை நடத்தியதிலும் அவர் செய்துள்ள மாபெரும் தொண்டைப் பற்றியும் பேசினர்.

திரு கே. எம். முன்ஷி, திரு எஸ். ஏ. பிரேல்வி, திரு நாகின்தாஸ், திரு டி. மாஸ்டர் ஹுஸேன் பெக்தயாப்ஜீ முதலியோர் அடுத்தாற் போல பேசினர்கள்.

## மஃஜிதில் முத்தம்.

### மங்கை ஓடினள்; வாலிபன் பகிஷ்கரிக்கப்பட்டான்

மஸ்ஜித் இறைவனை வணங்கும் பரிசுத்த ஸ்தலமாகும். எத்தகைய காதல் விளையாட்டுகளுக்கும் அஃது இடமன்று. ஆனால் பெரோஜ்பூரில் பலோக்கன் வாலி மஸ்ஜிதில் ஒரு முஸ்லிம் யுவனும் யுவதியும் முத்தங் கொடுத்துக் கொண்டனர். இதைச் சில சிறுவர்கள் பார்த்து வெளியில் சொல்லி விட்டார்கள். இதைச் செவியுற்ற முஸ்லிம்கள் ஆத்திரமடைந்து கும்பல் கூடத் தொடங்கி விட்டார்கள். உடனே அக் காதலர்கள் அம் மஸ்ஜிதை விட்டுத் தப்பிச் சென்று விட்டார்கள். மாலைக்குள் அவ்வூர் முழுதும் விஷயம் பரவியது. ஒரு பெருங் கூட்டம் அப் பெண் வீட்டை நோக்கிச் சென்றது ஆனால் இப்படிவருவார்களென்பதை முன்னதாக அறிந்த அப்பெண்ணின் பெற்றோர்கள் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு வேறூருக்குப் போய் விட்டார்கள். அங்கு ஏமாற்றமடையவே முழுக் கோபத்துடன் அவ் வாலிபன் வீடு நோக்கி அக் கூட்டம் திரும்பியது. ஒரு மௌலவி அவ்வாலிபனைக் கல்லால் அடித்துக் கொல்லுவதே சிறந்த தண்டனையெனக் குர்ஆன் கூறுவதாகச் சொன்னார். அப் பையன் கூட்டத்தைக் கண்டு கதவைத் தாளிட்டுக் கொண்டான்; உள்ளூர்த் தலைவர்கள் கூட்டத்தினருக்குச் சமாதானம் சொல்லிக் கலைத்தனர். அப்பையனை எந்த மஸ்ஜிதுக்குள்ளும் போகாதபடியும் முஸ்லிம் கடைக்காரர்கள் அவனுக்கு ஒரு சாமானும் கொடுக்காதபடியும் பகிஷ்காரம் செய்து விட்டனர்.

## கொள்ளைநோய் சம்பந்தப்பட்ட 100பேர் தப்பியோடினார்கள்

### தோப்பிதோட்டத்திலுள்ள அதிகாரிகளின் சீர்கேடு

கொள்ளைநோய்கள் ஊரோடு சம்பந்தப்பட்டவர்கள் நூற்றுக்குமேற்பட்டவர்களை அதிகாரிகள் கொண்டுபோய்க் கொள்ளைநோய் ஒதுக்கிடத்தில் இருக்கச் செய்துவிட்டு, இவர்களுக்குப் போதிய உணவுப்பொருள்கள் சமையற்பாத்திரங்கள் விளக்கு முதலி வைகளைக் கொடாமையினாலும் குறித்த கூடாரத்தில் அவர்கள் இருக்க இடம்போதாமையினாலும் சென்ற செவ்வாய்க்கிழமை 100 பேர் வரையில் சென்று போலிஸ் தானத்தில் முறையிட்டார்கள்.

இவர்கள் 20 பேர் சீன வியாபாரிமார் அவர்கள் தங்கள் பொருள் பண்டங்களுக்கு அதிகாரிகள் பொறுப்பெடுத்தாலன்றித் தாங்கள் ஒதுக்கிடத்திற்குப் போகமாட்டோமென்று மறுக்க அதிகாரிகள் அவர்களுடைய கேள்விக்கிணங்கி ஒதுக்கிடத்திற்கு அவர்களை அனுப்பினார்.

# வெண்பாவில் புகழேந்தி

மூளாய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணக் கலாநிலையத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி இற்றை ஞான்று இலங்கை தாழியும் நிலையிலுள்ளது. ஆரியம் இலத்தீன் முதலிய தொன்மொழிகள் தோன்றிய காலத்துத் தோன்றியதென்பதையும் இற்றைஞான்று புகழ் பெற்றிலங்கும் ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய புது மொழிகளிலும் பார்க்கச் சிறந்தமைந்த நல்லிலக்கண வரம்புடையதென்பதையும் கடவுளரும் காதல்கொள்ளும் இனிமையாம் குணத்தினைச் சுதந்திரமும் தகவும் ஒட்பமும் ஒருங்கமையப் பெற்றதென்பதையும், பல்லுயிரும் பலவுலகும் படைத்து அளித்து அழிக்கும் எல்லையறு பரம்பொருள் போல் முன்னைப் பழ மொழிகட்குப் முன்னைப் பழமொழியாய்ப் பின்னைப் புது மொழிகட்கும் அப்பெற்றித்தாய் விளங்குகின்றதென்பதையும், எம்மொழியகத்தும் காணக்கிடையாப் பொருளிலக்கணப் பாகுபாடு உடையதென்பதையும், பிறமொழிக்கலப்பின்றித் தனித்தியங்கும் தன்மையுடைய உயர்தனிச் செம்மொழி என்பதையும் குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதனை இந்தியா முழுவதற்குமே இதுமொழியாக வழங்கப்பட்ட தென்பதையும் இன்னும் இன்னோரன்ன பல சிறப்பியல்களையும் நீங்கள் நன்கறிவீர்கள். ஆகையால் இவைபற்றி விரித்தல் வேண்டியதன்று.

இத்தகைய அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழி நச்சும் பெருமை மூச்சங்கத்து ஆலவாயவிர்சடைக் கடவுள், அகத்தியர், முருகவேள், பெருந்தேவனார் முதலிய முத்தமிழ்த் துறையின் முற்றப்போகிய முதுபுலவர்களால் முற்காலத்தில் வளர்க்கப்பட்டது (இச்சங்க வரலாறுகளை இறையனார் அகப்பொருளுரையிற் கண்டு கொள்க) நல்லிசைப்புலவர்கள் நல்குரவால் நலியாது வள்ளல்கள் உள்ளத்தால் உவந்தளித்த பொருள்பல பெற்றுத் தம் வாழ்க்கையினை நடத்தினர். அதனால் அவர்கள் தம் ஆயுள் முழுவதையும் அருநூல்கள் அமைப்பதிலேயே கழித்தனர். நாளுக்கு நாள் நயமுடை நன்னூல்கள் தோன்றின மருத்துவ நூல்கள், சோதிட நூல்கள், பொருள்நூல்கள் வானநூல்கள் உலகபுராணங்கள் முதலிய தோன்றின.

இவ்வாறு பெருகிய தமிழ் நூற்கடல் கொடுங்கடலாற் கொள்ளை கொள்ளப்பட்டது. முத்தமிழ் நூல்களும் பிறவும் அழிதொழிந்தன பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், இந்திரகாளியம் முதலியன புகழுடம்பை நிறுத்திப் பூதவுடம்பைப் போக்கினார்போற்றம் பெயரை நிறுத்தித் தாமழிந்தன. இருந்தன சிலவும் எரியாலும் செல்லாலும் இன்னும் பிற ஏதுக்களாலும் அழிந்து கொண்டே வந்தன. இறுதியில், இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பன இடைச்சங்க காலத்து இருந்த ஒல்காப்புலமைத் தொல்காப்பியரால் இயற்றப்பட்ட திணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்டபனையளவு காட்டும் படித்தாய்ச் சிற்றளவினவாகிய சொற்றொடர்களில் சிறந்தமைந்தனவாகிய பெரும் பொருள்கள் தோன்றித் திகழும் தொல்காப்பியமும், கடைச்சங்க கால நூல்களாகிய அன்பின்னைந்திணைக் களவினைக் கூறும் களவியல், கீழ்க்கணக்கு நூல்கள் அருங்காவியங்களாகிய பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியனவுமே. இவற்றிலும் சிலவற்றில் சில பகுதிகள் இல்லாதிருத்தல் துயரத்துக்கிடமானதே. முன்னைய இரண்டும் இலக்கண நூல்கள். மேற்கணக்கு நூல்கள் ஐவகைப் பாக்களாலும் அகபுறப் பொருட்டுறைகள் பற்றித் தொகுக்கப்பட்டவை. கீழ்க்கணக்குகள் அறம், பொருள், இன்பம், அடுக்கித் திறம்பட வெண்பாவால் யாக்கப்பட்டன. பின்னைய மூன்றினுள் பாரதம் வெண்பாவும் அகவலும் உரையும் விராய்த்திருந்திய செங்கோவுடையிருக்கைப் புலவராய பெருந்தேவனாராலும், சிலப்பதிகாரம் அகவலால் அரசிளம்புலவராய இளங்கோவடிகளாலும், மணிமேகலை அகவலால் தண்டமிழ்ச் சாத்தனாராலும் இயற்றப்பட்டன. இவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையுங் கூறும் காப்பியங்களாம். இவற்றின் பின் தோன்றிய சிறந்த காவியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம், சூளாமணி, நைடதம் முதலியனவும், புராணங்களும், பிறவும் சங்ககாலத்திலிலங்கிய வெண்பா அகவல் முதலியவற்றால் ஆக்கப்படாது இலங்காத விருத்த பேதங்களால் திருத்தமுற யாக்கப்பட்டன.

இவற்றையெல்லாம் நன்கு சீர்தூக்கி ஆராயின் விருத்தங்களால் காவியங்களைக் கவினுற இயற்றுவது இலகுவானதென்பதும் அகவலால் எழுதுற அமைப்பது சிறிது கடினமானதென்பதும், வெண்பாவால் பண்புறப்பாடுவது அரிதானதென்பதும், தெற்றெனப் புலனாகும். இதுகாலைக் கடலுள் புலவர் திலகராகிய புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பா ஒன்றே முழுவதும் வெண்பாவினால் ஆக்கப்பட்டிருத்தலினும் விளங்கும். இவ்வருஞ் செயலைச் செய்தமைபற்றன்,

"வெண்பாவிற்புகழேந்திபரணிக்
கோரசயங்கொண்டான்விருத்தமெனு
மொண்பாவிலுயர்கம்பன் கோவை
உலாஅந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்
கண்பாயகலம்பகத்துக்குஇரட்டை
யர்கள் வசைபாடக்காளமேகம்
பண்பாகப்பகர்சந்தம்படிக்காசலா
தொருவர்பகரொணாதே"

என்னும் இன்னின்ன செய்யுள் செய்தற்கு இன்னாரின்னாரே சிறந்தார் என்று கூறும் இச்செய்யுள் புகழேந்திப் புலவரை வெண்பா இயற்றுவதில் சிறந்தாராக எடுத்துக்கூறிற்று. என்னனும் சாலும். அறிஞர்களே! இஃதொன்றே புகழேந்திப் புலவர் வெண்பாவில் புகழ் ஏந்தி என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்காதா?

இவர், கம்பர் ஒட்டக்கூத்தர், ஒளவையார் முதலிய சிறந்த புலமை மிக்கவர்கள் இலங்கியகாலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்தவர். இக்காலத்தைக் கடைச்சங்க காலத்தின்பின் தமிழ் வளர்ச்சி ஓங்கிய காலங்களிற் றலைசிறந்ததெனலாம்: செங்கற்பட்டை அடுத்துள்ள பொன்விளைந்த களத்தூரில் தொண்டை மண்டல வேளாளகுலத்திற் பிறந்தவர். களத்தூரில் வசித்திருந்த ஒரு வண்மை நிறைந்த வேளாளனது வயலினுள் நெற்கள் பொற்கதிரின்றன எனவும் அதனால் அவ்வூர் பொன் விளைந்த களத்தூரெனறு அழைக்கப்பட்டதென்றும் கூறுவர் "சடைச் செந்நெல் பொன் விளைக்கும்" என்னும் புகழேந்தியார் கூற்று மிக்கதை வலியுறுத்துகின்றது.

நளவெண்பா ஏகன் சிலவற்றில் திருமாலுக்குரிய காப்புச் செய்யுட்கள் காணப்படுதலினாலும் நூலினுள் சிவபிரானைக்குறித்து "வையத்தாருண்ணக் கடுவிடத்தை உண்ட ஒரு மூன்று கண்ணனைப்போன்றனனே" "பொடியாடி கொன்றதெல்லாம் பொய்" "நெற்றித்தனிக்கண் நெருப்பைக் குனிவிடுக்கும்" என மூன்றிடத்தும் திருமாலைக் குறித்து,

"செங்கண்மாலல்லனேல்" மிக்கோனுலகளந்த மெய்ப்படியே சார்பாகப் புககோர் அருவினைபோற் போயிற்றே" "நாராயண நமவென்று அவனடியிற் சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்" 'மையாழியிற் றுயிலும் மாலனையான்" என்று நாலிடத்தும் கூறப்பட்டிருத்தலினாலும் இவர் சைவசமயத்தினரா? வைணவசமயத்தினரா? என்று ஒருதலை துணிதற்கு முடியாதிருக்கிறது. கர்ணபரம்பரைக் கதைகளாலும் பிறவற்றாலும் பலரிவரை வைணவ சமயத்தினரென்பர். கலி நளனைச் சேர்ந்தான் என்பதை "நாராயணாய நமவென்றவனடியிற் சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல்" சேர்ந்தான் என்றும், நளனது தேர்ப்பாகன் வடிவு நீங்கியது என்னுமிடத்தில் "மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்பாகப் புக்கோர் அருவினைபோல்" நீங்கியது என்றும் புலவராற் கூறப்பட்டிருப்பன அவர் கூற்றை வலியுறுத்தும. இதனை அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை எடுத்துரைப்பார்களாக. இவருடைய கல்வி மதிவைக் கண்ட செண்பகமாறன் என்னும் பாண்டியனிவரைத் தன்னுடைய ஆஸ்தான வித்துவானாக்கினான். வேறு கூறுவாருமுளர். அவனுடனிருந்த நாட்களில் அவன் மகளுக்குக் கல்விகற்பித்து அவளைப் பண்டிதையாக்கினர். இங்ஙனமிருக்கும் நாட்களில் பொன்னி நாடாளும் புரவலனும் குலோத்துங்கனுக்குப் பெண் கேட்கும்படி அவன்றன் ஆசிரியரும் ஆஸ்தான வித்துவானுமாகிய ஒட்டக்கூத்தர் பாண்டியனிடம் வந்து பேசிக்கொண்டிருக்கையில் பாண்டியன் பரிகாசமாய்ச் "சோழன் பாண்டியர் குலத்துப் பெண்ணைக் கொள்ளத்தக்க உயர்ச்சியுடையவனு? அவனுடைய சிறப்புக்கள் யாவை? சொல்லும்? என்று கேட்டான். உடனே கூத்தர் சோழனுடைய குதிரை, நதி, மலை, குலம், வீரம், கொடி, நகரம், தேசம் எனும் எட்டிற்கும் பாண்டியனுடைய குதிரை முதலிய எட்டும் ஒப்பாகாஎனும் பொருளமைந்த,

"கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே
ஆருக்கு வேம்புநிகராகுமோ அம்மானே
ஆதித்தனுக்கு நிகர் அம்புலியோ அம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன் கொடிபோ அம்மானே
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கை போ அம்மானே
ஒக்குமோசோணாட்டைப் பாண்டி நாடம்மானே"

எனும் பாடலைக் கூறினர். இதைக் கேட்ட புகழேந்திப் புலவர் அதற்கு மாறாகப் பாண்டியனுடைய மலை, நகர், கொடி, குலம், ஆறு, மாலை, வீரம், என்பன சோழனுடைய மலை முதலிய ஏழிலும் சிறந்தன என்பதைக் காரணங்காட்டி நிறுவிப் பாண்டியன்றன் பராக்கிரமம் பகர்வரிது என்றும் பாடினர்.

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்தது அம்மானே!
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே!
திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியில் ஏறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரைபெருதிரில் காவிரியோ வையையோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியும் கண்ணியோ அம்மானே!
பாரை பணிக்கதும் சோழன் பதந்தனையோ அம்மானே!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே!"

என்பதே அச் செய்யுளாகும். இச்செய்யுளிலிருந்தே புகழேந்தியாரது சரித்த அறிவையும் நுண்மாணுழை புலத்தையும் அறிந்துகொள்ளலாம்.

பாடியவுடன் கூத்தர் பின்னும் தம் அரசனைப் புகழவேண்டி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## உரும்பராய்க் கலக வழக்கு

### காயமுற்றவன் இறந்ததன் விளைவு

இவ்வழக்கு 9-6-46ல் விசாரணை யானது. அன்று மானிப்பாய் ஆஸ்பத்திரி டாக்டர் ஜேம்ஸன் யாழ்ப்பணம் தரும ஆஸ்பத்திரி டாக்டர் சவரிமேஸன் நாயன்மார்கட்டு வைத்தியசாலை டாக்டர் இராமநாதன் ஆகிய இவர்களுடைய சாட்சியங்கள் விளக்கப்பட்டபோது தெரியவந்ததாவது:—

(1) காயமடைந்து இறந்துபோன முருகேசு கந்தையா என்பவர் யாழ்ப்பாணம் தரும ஆஸ்பத்திரிக்கு 18-5-36ல் கொண்டு போகப்பட்டார். அன்று டாக்டர் சதானியேல்ஸ் அவர்கள் பரிசோதித்து ஏற்ற சிகிச்சை செய்து காயக்காறனை வார்ட்டில் சேர்த்ததாகவும் அடுத்தநாட் காலையில்தான் T. M. O ம்ஆகப்பரிசோதித்தபோது முறிவு ஒன்றுந் தென்படவில்லையென்றும் பின் 21 - 5 - 36 நோயாளியின் வேண்டுகோளின்படி நோயாளியை வீடு போக விட்டதாகவும் அறிவித்தார்.

(2) டக்ரர் ஜேம்சனது சாட்சியம்:— தான் 24 - 5 - 36 ல் ஷை கந்தையாவைப் பரிசோதித்தபோது மண்டை ஓடு உடைந்திருக்கக் கண்டேன். உடனே புகைப் படம் பிடிக்கப் பட்டது படம் முறிவைக் காட்டியது. நோயாளி தான் நாயன்மார்கட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெறுவதால் அங்கு போவதாகச் சொல்லிப் போய் விட்டதாகத் தெரிவித்தார்.

இதன்பின் நாயன்மார்கட்டு வைத்தியசாலை டாக்டர் இராமநாதன் அவர்களது சாட்சியம் விசாரிக்கப் பட்டது. அவர் சொன்னதாவது: ஷை நோயாளியைத் தான் 23-5-36 பரிசோதித்தபோது மண்டை ஓட்டில் உடைவிருக்கக் கண்டு அவரை 24-5-36 மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் படம் பிடித்து வரும்படி அனுப்பியதாகவும் மறுநாள் உடைவைக் காட்டும் படத்தையும் பார்த்ததாகவும் நோயாளியின் மண்டை ஓட்டுள் கட்டுண்டாகி இருப்பதாக நிதானித்து அதற்கேற்ற சத்திர சிகிச்சை பெறும்படிக்கு மறுபடியும் தருமஆஸ்பத்திரிக்குஅனுப்பி விட்டதாகவும் தெரிவித்தார். இந்த நோயாளி தரும ஆஸ்பத்திரியில் சில நாள் இருந்து இறந்தார். இவர் பிரேத சோதனை செய்தபோது மண்டை உடைந்திருப்பதாகவும் உள்ளே கட்டு உண்டாகி இருப்பதாகவுங் கண்டனராம். (ஸ. நி)

## 3 குழந்தைகள் பெற்ற ஸ்திரீ

### B. A. பரீக்ஷையில் தேறினள்

தாங்கைல், ஜூன் 15—

மைமன்ஸிங் ராதாசுந்தரி பெண்கள் ஹைஸ்கூல் உபாத்தியினியான மிஸ் சுபாவ பௌமிகர் இவ்வருஷம் பி. ஏ பரீக்ஷைக்கு பிரைவேட்டாக ஆஜராகித்தேறினர் இவருக்கு 3–குழந்தைகளிருக்கின்றன. இவரது கணவர் ஸ்ரீமான் ஆனந்த சரண பௌமிகரும் மைமன்சிங்கின் மற்றொரு ஹைஸ்கூலில் ஆசிரியராக இருக்கிறார். மிஸஸ் ஹிராங் பிரபா சென்குப்தா பி டி. பரீக்ஷையில் தேறினர். இவர் 1927–ம் வருஷம் தமது விவாகத்திற்குப் பிறகு பி. ஏ. பரீக்ஷையில் தேறித் தற்போது ஆசிரியைப் பயிற்சிப் பரீக்ஷையில் தேறியிருக்கிறார். இவருக்கு 8வயதுடைய பெண் இருக்கிறது. இவரது கணவன் கல்கத்தா ஹைக்கோர்ட்டைச் சேர்ந்த அட்வகேட்டாவார்.

## வைத்திய இலாகாவில் இரு பெண் குமாஸ்தாக்கள்

கொழும்பு ஜூன் 16ல

வைத்திய இலாகாவில் குமாஸ்தா வேலைக்காக இரண்டு பெண்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தற்காலிகமாகவே மேற்படி இலாகாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். நேற்று இவ்விரண்டு பெண்களும் அரசாங்க காரியாலயத்தில் நுழைந்ததும் அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது. புதிய இடத்திற்குச் சென்ற போதிலும் அவர்கள் சர்வசாதாரணமாகவே பழகினர்,

## மண் வெட்டியால் மண்டையி லடித்தார்

### பெண் கூறிய சாக்ஷியம்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சண்டிருப்பாயில் வசிக்கும் சிவசம்பு என்பவரை அவ்வூர் (1) கந்தையா ஓர் கத்தியால் குத்தியதாகவும் (2) தாமோதரம்பிள்ளை என்பவர் ஓர் மண்வெட்டியால் அடித்ததாகவும் அவ்வூர் பொன்னர் என்பவரைச் செல்லையா கையால் அடித்ததாகவும் (4) சின்னத்துரை கல்லால் எறிந்ததாகவும் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப் பட்டது.

பொன்னம்பலம் பெண் அன்னப்பிள்ளை சாட்சியம் கூறியதாவது:—

சென்ற 14ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் நானும் எனது மகன் சிவசம்புவுமாகத் தோட்டத்தால் வீட்டுக்குச் சென்றோம். செல்லும் போது தாமோதரம்பிள்ளை எனது மகனைக் கண்டதும் ஓர் மண்வெட்டியால் தலையில் அடித்தார். திரும்பவும் ஒருமுறை அவனுடைய காதிப் பக்கத்தில் அடித்தார். எனது மகன் நிலத்தில் விழுந்தார். நான் சத்தம்போட்டேன். அவர் என்னையும் நிலத்தில் தள்ளி விழுத்தினர். நீதியீனமாக வாயில் வந்தபடி வைதார். அதைக் கேட்டு எனது புருஷன் தோட்டத்திலிருந்து ஓடி வந்தார்.

அவர் வந்ததும் செல்லையா வந்து கையால் அவரை அடித்தார். சின்னத்துரை என்பவர் ஓர் கல்லால் எறிந்தார். இதற்கிடையில் கந்தையா கையில் ஓர் வில்லுக் கத்தியுடன் வந்து எனது மகன் சிவசம்புவுக்குக் குத்தினர். நாம் நடந்தவை விதானைக்கு அறிவித்தோம்.

மேற்குறித்த வழக்கில் எதிரிகளுக்கு வழக்காளிகள் இருவருமாகக் கத்தியாலும் பொல்லாலும் காயப்படுத்தியதாக ஒரு எதிர் வழக்கும் தொடரப்பட்டது.

(1) கந்தையாவும் (2) சிவசம்புவும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

வழக்கு வருகிறமாதம் இரண்டாந் தேதிக்குத் தவணையிடப்பட்டிருக்கின்றது. ( . கி.

## ஜெருசலேத்திற்கு வெளியே கலகம்

ஜெரூஸலம், 14ல

இன்றுகாலையில் ஜெருஸலத்திற்கு வெளியே அரபியர்கள் மீண்டும்கலகஞ்செய்யத் தொடங்கினர்கள். இதகாரணமாக5யூதர்களுக்குக்காயம் ஏற்பட்டது. 4மைல் தூரத்தில் ஜாபா ரோட்டில் கலகக்காரர்கள் ஓடிக்கொண்டிருந்த ஓர் மோட்டார்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் இதேபோல் பஸ்கள்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. கலகக்காரர் அவசரச் சட்டத்திற்கு அஞ்சவில்லை

## சீனத் தகராறு தீரக் கூடுமாம்

ஷாங்கை, ஜூன் 15—

சீனாவில் உள்நாட்டுக் கலகம் தோன்றுமோ வென்னும் அச்சம் நீங்கிச் சமரச மற்படலாமென்னும் குறிகள் இப்போது காணப்படுகின்றன. தெற்கு மாகாண சைந்நியங்கள், ஹீனான் பிரதேசத்தைக் காலி செய்து போய்விட்டபடியால் தெற்கு மாகாணத்தை நார்க்கி மத்திய சர்க்கார் சைந்நியங்கள் முன்னேறவில்லை. குவாங்ஸி மாகாணக் கலகத்தை அடக்கும் விஷயத்தில் சியாங்காய்ஷேக் உறுதி பூண்டிருக்கிறார். ஆயினும் சர்க்கார் விரும்புவது சமரசமென்பதையும் அவர் வற்புறுத்தினர்.

குவாங்குங் மாகாணத்தில் ஜப்பானுக்கு விரோதமான காரியங்கள் நடைபெறுவதைப் பலமாகக் கண்டித்து, காவாயிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் அறிக்கை விடுத்திருப்பதால் கான்டனில் பீதி ஏற்பட்டுள்ளது. இக்கண்டனத்தின் மூலம் தெற்குச் சீனாவில் சீனா–ஜப்பானிய நெருக்கடி தோன்றுமென்னும் பயமேற்பட்டிருக்கிறது.

## மக்களை அடித்தமாதா

### குற்றவாளி அல்லவென்ற தீர்ப்பு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சிதாரியிலுள்ள 2–ம் குறுக்குத் தெருவில் வசிக்கும் அசலின்காமி என்னும் ஓர் சிங்களமாது பியதாசன் என்னும் தனது 5 வயதுச் சிறுவனையும் சோனுவென்னும் 3 வயதுச் சிறுமியையும் பிரம்பால் அடித்துக் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டிப் பொலிசார் அவள்மீது வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதிக்கு நியாயதாக்தார் பேரல் என்பவர் கூறியதாவது:—

பிள்ளைகள் அதிகமாக றோட்டுக்குக் குறுக்கால் ஓடும் சுபாவமுடையவராய் இருந்தனர்; குறித்த தினத்தன்று தாயார் வீட்டில் தனது சருமத்தைக் கவனித்துக் கொண்டிருக்கையில் பிள்ளைகள் தெருவுக்குக் குறுக்கே ஓடினதைப் பிறர் அறிந்ததும் தாயார் சீற்றங்கொண்டு அதிகமாக அடித்தது உண்மையே" நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்லவெனக் கூறி விடுதலை செய்தார். (ச கி.)

## சயிக்கிள் திருட்டு வழக்கு

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சென்ற 16-6-36 செவ்வாய்க்கிழமை சுவிஸியில் வசிக்கும் கணபதி வெள்ளையனும் இருபாலையில் வசிக்கும் செம்பன் முத்தனும் சென்ற 3ம் திகதி ஓர் "றலி" யை சிக்கிளைப் பெரியகடையில் வசிக்கும் எம். பி. எம். மீரு லெப்பை என்பவரிடமிருந்து திருடியதாகக் குற்றஞ் சாட்டி வழக்குத்தொடரப்பட்டனர். வழக்குத் தொடர்ந்தவராகியசார்சன் செல்லையா கூறிய சாட்சியமாவது.

"முதலாம் எதிரி தாம் சென்ற 12ந் திகதி 2ம் எதிரிக்கு சில்வர்கிங் சயிக்கிள் விளக்கொன்றை விற்றதாகக் கூறினர். அந்த விளக்கு யோவான் ஞானப்பிரகாசத்தினுடையதென்றும் தெரிவித்தார். நான் இதை விசாரணை செய்து தேடிப்பார்த்தபோது 2ம் எதிரி வீட்டில் மூன்று சயிக்கிள் விளக்குகளும் H. B. 202 இலக்கமிடப்பட்ட நகரசங்க நம்பர்த் தகடும் வேறு சில சயிக்கிள் சாமான்களும் இருக்கக்கண்டெடுத்தேன். நான் யோவான் ஞானப்பிரகாசத்தைக் கூட்டிச்சென்று காட்டியபோது அவர் ஒரு லாம்பும் நம்பர்த் தகடும் தான் கொடுத்தவைதான் என்று கூறி அவற்றைக் காட்டினர். இதன் பிறகு எம். எல். எம். மீரு லெப்பையின் சயிக்கிள் களவு போனதாக அறிந்து விசாரித்தபோது அவர் தனது சயிக்கிள் ஒன்று காணமற் போனதாகக் கூறினர். 1-ம எதிரி விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 2-ம் எதிரி 100 ரூபா பிணையில் விடப்பட்டார்.

இவ்வழக்குத் திரும்ப விசாரணைக்கெடுக்கப்பட்டபோது யோவான் ஞானப்பிரகாசம் –சாட்சியம் கூறியதாவது:—

சென்ற 7ம் திகதி நான் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுக்கு வந்து எனது சயிக்கிளை காணிப் பதிவுக் கந்தோருக்கு அருகாமையில் வைத்தேன். வைத்துவிட்டு எரு பிறக்கிறாசியாரைக் காணச் சென்றேன். சிறிதுநேரம் மென்று திரும்பி வந்து பார்த்தபோது எனது சயிக்கிள் அவ்விடத்திலில்லை. நான் தேடிப் பார்த்தேன். அகப்படவில்லை பொலிசாருக்கு இச்சம்பவத்தைச் சொன்னேன். எனது சயிக்கிளின் அடையாளங்களையும் சொன்னேன். சில நாட்கள் சென்றபின் பொலிசார் என்னைக் கூட்டிக்கொண்டு முத்தனுடைய வீட்டுக்குச் சென்றனர். அப்போது 1ம் எதிரி வெள்ளையனுமங்களுடன் வந்தான். அவன் வீட்டில் எனது சயிக்கிளையும் 3 சயிக்கிள் லாம்புகளையும் வேறு சயிக்கிள் பகுதிகளையும் கண்டேன். எனது சயிக்கிளில் சிலசாமான்கள் காணப்படவில்லை. சயிக்கிளின் விலை 150 ரூபா நான் நாலுமாச காலமாக அதைப் பாவித்தேன். கம்பனியிலிருந்து புதிதாகவே நான் எடுத்தேன்.

இதன்பிற்பாடு M. M. A. காதர் என்னும் சார்சன் சாட்சியம் கூறிய பின் வழக்கு 25-6-36 க்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ச. கி)

# மானமிழந்தபின் உயிர்விடத் துணிந்தமாது

## 18 வயதுக் காரிகையைப் பலாத்காரமாகக் கற்பழித்த வரலாறு

## றெயிலில் நடந்த அட்டூழியம்

பெர்ஹாம்பூர், ஜூன் 15—

18 வயதுள்ள சசிரேக பட்நாயகினி என்ற பெண்ணைப் பலவந்தப்படுத்திக் கற்பழித்ததாக வங்காள நாகபுரி ரயில்வேயைச் சேர்ந்த (என்ஜினுக்குக் கரிதள்ளும்) கே. சங்கர். பி. சத்தியராஜு (கார்டு) மகமது அப்துல் ஹமீது இவர்களும் இக் குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததாக (என்ஜின் டிரைவர்) எஸ். பீமண்ணு (கடைக்காரர்) கே. நரசிம்மலு இவர்களும் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் வழக்கு இச்சாபூர் தாசில்தார் மாஜிஸ்திரேட்முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சென்ற மேமாதம் 7ந் தேதி இரவு இக் குற்றம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

### முதல் சாட்சி

வழக்காளிபக்க முதல் சாட்சியாக ரயில்வே போலிஸ் சப் இன்ஸ்பெக்டர் விசாரிக்கப்பட்டார்.

அவர் தமக்குக் கிடைத்த தகவலின் பேரால் தாம் மே மாதம் 8-ம் தேதி பாலாஸா ஸ்டேசனுக்குச் சென்றதாகவும் அங்கு சசிரேகா தனது மருமானுடனும் இன்னொரு தூரபந்துவுடனும் இருக்கக் கண்டதாகவும், தாம் சசிரேகாவை விசாரணை செய்து அவளிடமிருந்து ஒரு வாக்குமூலம் வாங்கியதாகவும் கூறினர். மேலும் அவர் தெரிவித்ததாவது:-

சசிரேகாவை ஒரு ஸ்திரீ வைத்தியர் சோதித்த ஸர்ட்பிகட் அனுப்பினர். ரயில்வே கார்ட்டான மகமத் அப்துல் ஹமீதின் உடைகளையும் மற்ற உடமைகளையும் கைப்பற்றிப் பின்னர் இவ்வெதிரிகளைக் கைது செய்தேன். சசிரேகாவினிடமிருந்து அவள் அந்த கார்ட்டால் கற்பழிக்கப்பட்ட ஸ்தலத்தை அறிந்தேன் அந்த ஸ்தலம் மண்டாஸா ரயில்வே ஸ்தலத்திலிருந்தும், ரயில்வே சிப்பந்திகள் வாசஸ்தலத்திலிருந்தும் ஒன்றரைப் பர்லாங்கு தூரமிருக்கும் நரசிம்மலுவின் கடை ஸ்டேசனிலிருந்து ஒரு பர்லாங்கு தூரமிருக்கும். இந்த ஸ்தலத்துக்கு அருகில் வீடுகளொதவுங் கிடையாது

### சசிரேகாவின் சாட்சியம்

சசிரேக பட்நாயகினி வழக்காளி தரப்பில் இரண்டாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான் பாலாகிமிடியில் பிறந்தேன். ஜொகல்கிஷோர் பட்நாயக் என்பது எனது கணவன் பெயர். 10 வருஷங்களுக்குமுன் எனக்கு விவாகமாயிற்று. மூன்று வருஷங்களுக்கு முன் கணவனது வீட்டுக்குச் சென்றேன்.

சென்ற மே மாதம் 7 ம் தேதி எனக்கும் எனது கணவனுக்கும் சச்சரவேற்படவே அவர் என்னை அடித்து எனது பிறந்தகத்துக்குப் போகச் சொன்னர். அந்நிலையில் நான் வீட்டை விட்டுப் புறப்பட்டு மண்டாஸா ஸ்டேசனுக்குச் சென்றேன். அப்பொழுது கையில் பணமில்லை. ஸ்டேசனுக்குச் செல்லும் வழியில் ஒரு கிழவியைக் கண்டு எனது நகைகளைக் கழற்றி அவளிடம் கொடுத்து அவைகளை அடகு வைத்துப் பணம் வாங்கித் தரும்படி கேட்டேன். ஸ்டேசனுக்கு வந்தபோது இரவு எட்டுமணியாகிவிட்டது.

மேடையிலிருந்த ஒரு கோமுட்டியை விசாரித்ததில் பர்லாகிமிடி செல்லும் ரயில் பத்து மணிக்கு வருமென அறிந்தேன். பிரயாணிகள் தங்கும் அறையில் கூட்டம் அதிகமாக இருந்ததால் நரசிம்மலுவின் கடைக்கருகிலுள்ள ஒரு மரத்தடிக்குச் சென்று அங்கு உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது ஒரு குட்ஸ்வண்டி வந்தது வெள்ளையுடை உடுத்த ஒருவரும் கறுப்பு உடை உடுத்திருந்த இன்னொருவரும் அக் கடைக்கு வந்து கடைக்காரருடன் பேசிக் கொண்டிருந்தனர்: அவர்கள் முதலாவது மூன்றாவது எதிரிகளாவர். அவர்கள் என்னிடம் வந்து, என்னைக் குட்ஸ்வண்டி மூலம் பர்லாகிமிடிக்கு அழைத்துச் செல்லுவதாகக் கூறினர். நான் அதற்கிணங்க மறுத்து, பிரயாணிகள் வண்டி மூலமே செல்வதாகத் தெரிவித்தேன். நான் மேலும் அங்கிருந்தால் போலிசார் என்னைக் கைது செய்து விடுவரென அவர்கள் பயமுறுத்தினார்கள். இதன் பேரில் வெள்ளை உடை அணிந்திருந்தவன் (சங்கர்) போய்விட்டான். மற்றவனை (கார்டு) அப்துல் ஹமீத் என்னை அழைத்துச் சென்று யாருமில்லா ஓரிடத்தில் எனது கையைப்பிடித்தான் நான் திமிறி எனது கையை விடுவித்துக் கொண்டேன். உடனே அவன் என்னைக் கீழே தள்ளினன். நான் சத்தமிட்டு அவன் என்னை நெருங்காவண்ணம் எனது கால்களையுங் கைகளையும் கொண்டு உதைக்கவே அவன் ஒரு கைக் குட்டையை எனது வாயில் திணித்து என்னை மானபங்கஞ் செய்தான்.

பின்னர் அவன் என்னைக் குட்ஸ் வண்டியின் என்ஜினுக்குக் கூட்டிக் கொண்டு போனன். அதில் (1, 2, 4, எதிரிகள்) இருந்தனர் நாலாவது எதிரியான எஸ். பீமண்ணு என்னைப் பார்த்து 'நீ ஏன் இங்கு வந்தாய்? இவர்கள் உன்னை அடிபோடு கெடுத்து விடுவார்களே!' எனச் சொன்னர். சத்தியராஜு என்னைத் தனது வைப்பாக இருக்குமாறு கூறினன்.

### கீழேகுதிக்க முயற்சி

பின்னர் வண்டி நகர ஆரம்பித்தது. மானமிழந்தபின் உயிர் எதற்கு என்றெண்ணி உயிர் துறப்பதற்காகக் கீழே குதிக்க முயன்றேன். ஆனல் சங்கர் என்னைப் பிடித்து எனது முயற்சி பலிக்காமல் செய்தான். பின்னர் வண்டி நிறுத்தப் பட்டது. சத்தியராஜு என்னைக் கீழே இறங்கச் சொன்னன். நான் மறுத்து விட்டேன். ஆனல் அவர்கள் என்னைப் பலவந்தமாகப் பிடித்திழுத்து ரயிலின் கடைசியில் உள்ள கார்ட்டுவண்டிக்குக் கொண்டு போனர்கள். அங்கு அப்துல் ஹமீதும் இருந்தான். அந்த வண்டியில் சத்தியராஜுலுவும் சங்கரும் என்னை மானபங்கஞ் செய்தனர். பாலாஸா ஸ்டேசனுக்குப் போய்ச் சேருமுன் அவர்கள் வண்டியை நிறுத்தி என்னைக் கீழே இறக்கிவிட்டனர். இந்த ரயிலில் வந்ததாக யாரிடமும் சொல்ல வேண்டாமெனவும் அவர்கள் கூறினர்.

பின்னர் ஏதாவதொரு ரயிலில் அகப்பட்டுச் சாவதென எண்ணித் தண்டவாளத்தின் மீது படுத்துக் கொண்டேன், பின்னர் யாரோ மூவர் வந்து என்னைப் பாலாஸா ஸ்டேசனுக்கு அழைத்துச் சென்றனர்.

மறுநாள் காலை 11 மணிக்கு ரயில்வே சப் இன்ஸ்பெக்டர் வந்து என்னை விசாரித்தார்.

சசிரேகாவின் சாட்சியம் முடிந்ததும் மேற் கொண்டு விசாரணை 24 ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது:

## விசேஷ விஞ்ஞாபனம்

நாளைக்கு (23-6-36) எங்கள் அரச சக்கரவர்த்தியின் ஜன்ம நாட்கொண்டாட்டம் நிகழவிருப்பதால் குறித்ததினத்து இந்து சாதனாலயம் சைவப்பிரகாசயந்திரசாலை யென்னுமிவைகளில் எக்கருமமும் நடைபெறா.

மனேஜர்.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸு

ஆனி மீ கூ௨ திங்கட்கிழமை


## ஆற்றாதவன் செய்யுஞ் செயல்

அபிஸீனிய சக்கரவர்த்தியை இத்தலிய சர்வாதிகாரியாகிய முஸோலினியுடன் எதிர்த்து யுத்தஞ் செய்யும்படி தூண்டிவிட்டவர்கள் சர்வதேசசங்கத்தார். சர்வதேசசங்கத்தாருள்ளும் பிருத்தானியரும் பிரான்ஸியருமே அந்தச் சக்கரவர்த்திக்கு அதிகம் ஊக்கத்தைக் கொடுத்தவர்கள். அபிஸீனிய சக்கரவர்த்தி யுத்தம் ஆரம்பிக்குமுன் இல்லையேல் யுத்த ஆரம்பத்தில் அதுவும் இல்லையேல் யுத்தமத்தியில், அதாவது அபிஸீனியர் இத்தலிய சைநியங்களைப் புறங்கண்ட சமையத்தில், முஸோலினியுடன் சமாதானம் பேசியிருந்தால் முஸோலினி எவ்வகையான நிபந்தனையுமின்றிச் சமாதானத்திற்கு வருதலுங்கூடும் போல் அந்தச் சமயத்தில் எவரும் எண்ணக்கிடந்தது. அபிஸீனிய சக்கரவர்த்தி அப்பொழுது சமாதானத்திற்குப் போகாத காரணம் சர்வதேசசங்கத்தார், அவர்களுள்ளும் விசேஷமாக பிருத்தானிய பிரான்ஸியர் தமக்குத் துணைபுரிவர் தம்மை நட்டாற்றிற் கைவிடமாட்டார்கள் நீதிக்குமாறாக நடக்கமாட்டார்கள் துரோகஞ் செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கையினாலாகும்.

இந்தச் சர்வதேசசங்கத்தின் பலவீனத்தையும் அச்சங்கத்திற் சேர்ந்தவருட் பராக்கிரமம் மிக்கவரென்று மதிக்கப்பட்ட பிருத்தானிய பிரான்ஸியரின் பேடித்தனத்தையும் உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றாக நடக்கும் கிருத்திரமத்தையும் உள்ளபடி உணர்ந்த முஸோலினி பகைவரை இலகுவிற் செயிப்பது கஷ்டமெனக்கண்ட மாத்திரத்தே அதர்மயுத்தமாகிய நச்சுக்குண்டுப் பிரயோகத்தைக் கையாளும்படி தம்முடைய இராணுவத்தாருக்கு அநுமதி கொடுத்தனர். இராணுவத்தார் அந்தத் தர்மவிரோதமான போரைத் தொடங்கி அபிஸீனியருள் பெண்கள் குழந்தைகள் விருத்தர் யுத்தத்திற் சம்பந்தப்படாதவர் பட்டவர் எல்லாரையும் அதஞ்செய்துவரக்கண்ட அபிஸீனிய சக்கரவர்த்தி பகைவர் செய்யும் அடாத போர்முறையைச் சர்வதேசசங்கத்திற்கு முறையிட்டார். குறித்த சங்கத்தார் இரும்புத்துண்டை விழுங்கிவிட்டு அதனைச் சீரணிக்கச் செய்வதற்குச் சுக்கை அவித்துக்குடித்தவனைப் போல, மிருகத்தனமான குரூர யுத்தத்தைச் செய்யும் இத்தலியர் விஷயத்தில் வியாபாரக் கட்டுப்பாட்டையுந் தடையையும் விதித்து அவர்களை அடக்கமுயன்றனர். இச் சர்வதேச சங்கத்தார் அந்தச் சமையத்தில் இராணுவ பலங்கொண்டு முஸோலினியை அடக்க முயன்றிருந்தால் அது ஒருபோது வாய்த்திருக்குமென்று சொல்லலாம். அதனை விடுத்து வியாபாரத் தடையினால் முஸோலினியை இவர்கள் கட்டுப்படுத்த முயன்றமை கோழிமுட்டைக்குச் சுருக்குஇட முயன்றவாறு பிரதிகூலமாய் முடிந்தது.

தங்கள் பிறப்புரிமையையும் இல்லத்தையும் மானத்தையும் காக்க நினைந்து உயிரைத் திரணமாக மதித்து யுத்தஞ் செய்த அபிஸீனியர் அபஜெயமடைந்தனர். அவர்களுடைய சக்கரவர்த்தி, நாட்டை இனிமேனும் மீட்கலாமென்ற நம்பிக்கைகொண்டு நாட்டைவிட்டகன்று அயிரோப்பியரிடம் சரண்புகுந்தனர். இத்தலியர் அபிஸீனியா முழுவதையும் தம் வசமாக்கினர். அபிஸீனியாவிலே தமக்கு மாறாக நின்ற அயிரோப்பியஸ்தானபதிகளையும் சனங்களையும் நாட்டைவிட்டு அகற்றினர். அங்குள்ள பிரான்ஸிய புகைரதப்பாதையைத் தங்கள் ஆதிக்கத்துள் ஆக்கினர். சுருங்கச் சொல்லுகில் சர்வதேச சங்கத்தாரை முஸோலினி அபிஸீனிய சக்கரவர்த்தியை மதித்த அளவிற்குத்தானும் மதிக்கவில்லையெனலாம்.

இவை இப்படியிருக்க, நாடிழந்த அபிஸீனிய சக்கரவர்த்தி, தலையாரி வீட்டில் ஒளிப்பதற்கு ஒதுக்கிடந் தேடிப்போன திருடனைப்போல, வேறு இடங்கிடையாமல் இங்கிலாந்திற்றான் ஒதுக்கிடந் தேடிப்போய் நிற்கிறார். பிருத்தானியர் பராக்கிரமத்தோடு கூடியவர்கள் நீதியுடையவர்போல் நடிப்பவர்கள் தம்மைப் பாதுகாத்துத் தாம் பறிகொடுத்த இராச்சியத்தையும் மீட்டுக் கொடுப்பார்கள் என்ற எண்ணத்தினாலேதான் அபிஸீனிய சக்கரவர்த்தி மற்றைய இராச்சியங்களெல்லாமிருப்ப லண்டன் நகருக்குச் சென்று நிற்கின்றார். ஆனால், பாவம்? அந்தச் சக்கரவர்த்தி இப்பொழுது சொல்வதென்ன "பெரியவீடென்று பிச்சைக்குப் போனேன், கரியை அள்ளிக் கையிலே தந்தார்கள்" என்ற பழமொழிதான். பிருத்தானியர் அபிஸீனிய சக்கரவர்த்திக்குக் கரியை அள்ளி அவருடைய முகத்திலே பூசாமல் கையிலே கொடுத்தது விசேஷமென்னலாம். பிருத்தானியர் அந்த அபிஸீனிய சக்கரவர்த்தி நினைத்த மதிப்போடு ஒருகாலத்திலே இருந்தவர்களென்பது மெய்தான்; அது எக்காலம்? மகா சக்கரவர்த்தனியாகிய விக்றோறியாச் சிமாட்டியார் காலம். பிருத்தானியருக்குடைய பெருந்தன்மைகள் இராணுவபெலம் நடுவு நிலைமை பகைவர்க்கு அஞ்சாமை முதலியனவெல்லாம் "போம்போது அவளோடும் போம்" என்றபிரகாரம் விக்றோறியாச் சிமாட்டியாரோடு போய்விட்டனவே! இந்த இரகசியத்தை ஏழை அபிஸீனியச் சக்கரவர்த்தி இப்பொழுது அறிந்தமைபோல யுத்த ஆரம்பத்தில் உணர்ந்திருந்தால், முஸோலினியுடன் யுத்தத்திற்குப் போகவும் மாட்டார்; தம்முடையநாட்டைப் பறிகொடுக்கவும் மாட்டார்; இப்படி வெறுவிலியாய் லண்டன் பட்டினத் தெருவழியே திரியவும் நேர்ந்திராது. முஸோலினி பிருத்தானியராகிய தம்மைப் பொருட்படுத்தாதிருப்ப, பிருத்தானியருக்கு அபிஸீனியாவிலேயுள்ள தொடர்புகளையும் உரிமைகளையும் இல்லையென்று நிராகரிக்க, அங்குள்ள பிருத்தானியரெல்லாம் உடனே அபிஸீனியாவை விட்டுப் போய்விடவேண்டுமென்று கட்டளை செய்து அப்படியே நாட்டைவிட்டு ஓட்ட, அவைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு அந்த முஸோலினிக்கு அஞ்சியிருக்கும் பிருத்தானியரிடம் இந்த அபிஸீனிய சக்கரவர்த்தி சரண்புகுந்தமை பேதமையல்லவா "அன்னையுயிர் செற்றவனை அஞ்சியுறைகின்றாய் - உன்னை யொருவற்கொருவன் என்றுணர்கை நன்றோ" என்று இராவணன் மாரீசனுக்குச் சொன்னபிரகாரம், அபிஸீனிய சக்கரவர்த்தி பிருத்தானியருக்குச் சொல்லிவிட்டு முஸோலினியிடம் போய் நேரில் இரந்தால் அந்த முஸோலினி பராக்கிரமசாலியல்லவா சுத்தவீரனல்லவா, அவர் இச் சக்கரவர்த்திக்கு ஏதும் சகாயஞ் செய்தலுங்கூடும்.

இப்பொழுது பிருத்தானியர் யாது செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்: இத்தலிக்கு விரோதமாகச் சர்வதேச சங்கத்தார் தம் பாட்டிலே செய்த வியாபாரத்தடைகளையும் கட்டுப்பாடுகளையும் தவிர்த்துவிடப்போகின்றார்களாம். ஏன்? அந்தக் கட்டுப்பாடுகளைக் கொண்டு இத்தலியரை அடக்க முடியவில்லையாம். இத்தலியரின் முன்னேற்றத்தையும் முஸோலினியின் சர்வாதிகாரத்தையும் தடுக்க முடியவில்லையாம். இந்தத் தடைகளும் கட்டுப்பாடுகளும் முஸோலினியிடத்து எவ்வகையான பயனையுஞ் செய்யவில்லையாம்! இவைகள் பயன் செய்யாவிட்டாற் பயன்செய்யக்கூடிய இராணுவபலத்தை உபயோகிக்கலாமே! இராணுவபலத்தை உபயோகிக்கப்போனால் முஸோலினியுடன் ஜர்மனிய சர்வாதிகாரியாகிய ஹிட்லரும் சேர்ந்து கொள்வாராம். சேர்ந்தாலென்ன; சேர்ந்தால் அந்த இரு சர்வாதிகாரிகளையும் இவர்கள் இராணுவபலத்தினாலும் தடுத்தல் முடியாதாம். ஆனதனால் இத்தலியருக்கு மாறான கட்டுப்பாடுகளையும் தடைகளையும் இவர்கள் தவிர்த்துவிடப் போகின்றார்களாம்! இவர்கள் செய்த கட்டுப்பாடுகள் தடைகள் இத்தாலியரிடம் பலிக்காதபோது, இவர்கள் அவற்றைத் தவிர்த்தாலுஞ்சரி, தவிர்க்காவிட்டாலுஞ்சரி இத்தலியரை இக் கட்டுப்பாடுகள் அசைக்கப்போவனவல்ல. இக் கட்டுப்பாடுகளையெல்லாம் தவிர்த்துவிட்டு இத்தலியரைச் சர்வதேசசங்கத்திற் சேர்த்து உலகசமாதானத்தின் பொருட்டு உழைப்பதே உத்தமமாகுமென்று பிருத்தானிய அந்நியநாட்டு விவகார மந்திரியாகிய மிஸ்ரர் ஈடன் வாதாடுகின்றார். அதாவது சுருங்கச் சொல்லுகில் முஸோலினியைக் கட்டுப்படுத்தவும் அடக்கவும் முயன்ற பிருத்தானியர் சர்வதேசசங்கத்தைத் தம்மோடு முஸோலினிக்குக் கட்டுப்படுத்திக் கொடுக்கப்போகின்றார். இவ்வளவு காலமும் இத்தலிநாட்டிற்கே சர்வாதிகாரியாகவிருந்த முஸோலினி, அச் சர்வதேசசங்கத்திற் சேர்ந்தால் அச் சர்வதேசசங்கத்திற்கும் அச்சங்கத்திற் பிரதான அம்ஸத்தவர்களாகச் சொல்லப்படும் பிருத்தானியர் பிரான்ஸியருக்கும் சர்வாதிகாரியாக வருதல் நிசம். முஸோலினியே எல்லாத் தத்துவராச்சியங்களுக்கும் சர்வாதிகாரியாக வந்துவிட்டால், பின் முஸோலினிக்கு எதிரிகள் பகைவர் இல்லையாக, அதனாலே உலகசமாதானம் பிறத்தலுங் கூடுந்தானேயென்ற ஒரு நியாயம் இருப்பதும் மெய்தான்.

---

## உலகில் தொழிலாளர் நிலைமை

வேலையில்லாக் கஷ்டமே இப்போது உலகின் நாலுபக்கங்களிலும் பரவி வருகின்றது. பிரான்சிலென்ன, பெல்ஜியத்திலென்ன, பிரிட்டனிலென்ன, ஸ்பெயினிலென்ன எங்கும் தொழிலாளர் கஷ்டங்கள் அதிகரித்திருக்கின்றன. இதன்பலனாக அத் தேசங்களில், தொழிலாளர்கள் வேலைநிறுத்தமும் மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றது. இதனை நிவர்த்திப்பதற்கு மார்க்கம் என்ன என்பதே பலரது கருத்தைக் கவர்ந்து நிற்கும் விஷயமாகும். வாரந்தோறும் வேலை செய்யும் நேரம்40மணிநேரமாகக் குறைக்கப்படுதல்வேண்டும் என்பது சிலரது கோரிக்கையாகும். பொருளாதார நிபுணர்களும் இதுவே கையாளத்தக்க முறையென்று கூறுகின்றனர். இம்முறை கையாளப் படுமாயின அதிகமான தொழிலாளர்க்கு வேலை கிடைக்கும் என்பது இவரது கூற்றாகும். அன்றியும், சமூக முன்னேற்றத்திற்கும் இஃது உதவி புரிந்து நிற்கும் என்பது அவர்கள் எடுத்துக் காட்டும் நியாயமாகும். வேலை நேரத்தைக் குறைத்தலால் தொழிலாளர்க்கு ஓய்வு நேரம் அதிகமாகுமென்பதும அதனால் அவர்களுக்கு அதிக சிரமம் ஏற்படாதென்பதும் உடல்நலன், மூளையபிவிருத்தி ஆதியன உண்டாகும் என்பதும் ஒத்துக் கொள்ளத் தக்க நியாயங்களேயாகும. ஆயின், இம்முறையைக் கையாளுதற்கு அவ்வந்நாட்டு அரசாங்கத்தார் விரும்புகின்றிலர். காரணமென்ன? முதலாளிமார்களின் பேராசையே இதற்குக் காரணமாகும். பிரான்சில் தற்போது சமதர்மக் கட்சியினர் அரசாங்கத்தை நடத்தி வருதலால் அந்நாட்டில், தொழிலாளர்கள் வாரம் ஒன்றுக்கு 40 மணி நேரமே வேலைசெய்தல் வேண்டுமென்னும் இம்முறை கையாளப்பட்டு வருகிறது. ஆயின், இந்தியா, பிரிட்டன் ஜப்பான என்னும் இந் நாடுகளில் இம்முறையைக் கையாளுதற்கு அரசாங்கத்தார் மாறாக நிற்கின்றனர். பிரிட்டனில், தொழிலாளர்களுக்கு வேறு வகையில் பலவிதமான நன்மைகள் இருக்கின்றமையால், 40 மணி நேர வேலைக் கட்டுப்பாடு ஏற்படுத்துதற்கு இது சமையம் அல்ல என்று கூறப்படுகிறது. ஜப்பானிய வர்த்தகர்களோடு பிரிட்டிஷ் வியாபாரிகள் போட்டி போடுதற்கு முடியாமல் இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். ஜப்பானில் வேலைநேரமோ மிக அதிகம். வேதனமோ மிகக் குறைவு. ஆகவே, அவர்களுடைய வர்த்தகத்தோடு ஏனையோர் போட்டிபோட்டு வெற்றியடைதல் எளிதன்று. இதனால் ஜப்பானிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பெற்று வரும் ஜப்பானிய பொருள்களை வாங்குதலே தகாது என்று ஒரு கட்சி எழுந்திருக்கிறது. ஆயின், அவ்வாறு செய்தற்கு எவரும் ஒருப்படுகின்றிலர். ஒருப்படினும், ஜப்பானிய பொருள்களைப் பகிஷ்கரிக்கும் ஆற்றலும் ஏனைய நாட்டவர்க்கில்லை. இவ்வாறு தமக்குள் போட்டியிடும் இந்நாடுகளின் மத்தியில் நின்று இந்தியா படும் அவஸ்தையோ இயம்ப முடியாததாகும். அங்குள்ள வேலை நேர அளவோ தொழிலாளர்களை வதைத்து விடுகிறது. அவர்களுக்கு அளிக்கப்படும் வேதனமோ அந்தோ! மிகமிகக் குறைவு. இந்தியப் பிரதிநிதியாகவுள்ளார், சர்வதேசசங்கத்தில் இக் கொடுமைகளை எடுத்து வாதித்த போதும சர்வதேசசங்கம் அதைப் பற்றி அதிக ஊக்க மெடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. அரசியல் விஷயங்களில் ஆற்றலற்றதெனக் காட்டி விட்ட இச்சங்கம் சமூக உலகிலும் தனக்கு அற்பமேனும் செல்வாக்கில்லையென்பதைக் காட்டுதற்கு முனைந்து நிற்கின்றது போலும். ஒவ்வொருவருக்கும் வேற்றுமைப் பட்ட நிலைமைகள் இருப்பதால், அவற்றைச் சீர்ப்படுத்துதற்குப் பொதுவான ஒரு திட்டம தயாரித்தல் சாலாது என்ற சமாதானம மாத்திரம் எடுத்துக் காட்டப்படுகிறது. தொழிலாளர்கள் என்றால் முதலாளிமார்களது வருமானத்தைஅதிகப்படுத்துதற்கு உபயோகிக்கப்படும் இயந்திரங்கள் என்று கருதப்படும் மனப்பான்மையே இவ்வித வேலை நிறுத்தங்களுக்குக் காரணமாகும். தொழிலாளர்களும் மக்களே. அவர்களும் தம்மை நம்பியிருக்கும் மனைவி மக்களை ஓம்ப வேண்டியவர்களே என்னும் உணர்ச்சி உண்டாகி அவர்கள் கருணையோடு நடத்தப்படும் வரை உலகில் நீதி நிலவுகின்றது என்று கூறுதற்கிடனில்லை. இக்கினை என்று ஏற்படுமோ அறியேம்.

---

## பருந்தின் வீழ்ச்சி

சென்ற வெள்ளிக்கிழமை யன்று மாலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள வித்தியாலய மண்டபத்தின் முன்பாகக் கார்கள் வரிசையாக நிற்கக் காணப்பட்டன. பல ஆடவரும் மகளிரும் அக்கார்களிலிருந்து இறங்கி மண்டபத்திற்குள் நுழையக் காணப்பட்டனர். வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த பருந்தும் "இதைப் பார்க்கத்தான் வேண்டும்" என்று சரேலென்று இறங்கியது. இறங்கி மண்டபத்திற்குள் நுழைந்ததும் விஷயம் இன்னது என்பது அதற்கு உடனே புலப்பட்டது. தனது ஜோடிடம் சரியாகிவிட்டது என்பதை அறிந்ததும் அதற்கு அளவிறந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. இந்தியாவிலிருந்து இலங்கை போந்த சங்கீதப்புலி பிரமஸ்ரீ வரதாச்சாரி அவர்களது கச்சேரி என்பதும், யாழ்ப்பாணத்திலுள்ள சங்கீத சபைகள் எல்லாம் சிறிது விழித்துக் கருமமாற்றத் தொடங்கித்தான் விட்டன என்பதும் பருந்துக்குத் தெரியவந்தது. "சரிதான். ஆகட்டும்" என்று கூறிக்கொண்டே பருந்து ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டது. அரசாங்க சபைத் தலைவர், அரசாங்கசபை அங்கத்தவர்கள், நீதவான்கள், வித்யாபகுதி டைரக்டர், யாழ்ப்பாண நகரமேயர், பிரதயாசிரியர்கள், ஆசிரியர்கள், பலசங்கங்களின் காரியதரிசிகள், பல ஆடவர் மகளிர் அனைவரும் வந்து சேர்ந்து விட்டார்கள். மேடையில் நமது புலி உட்கார்ந்து கொண்டது. இருமருங்கும் மிருதங்கம் வல்லாரும பிடில் வல்லாரும தத்தம் கருவிகளோடு உட்கார்ந்தனர். திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் எழுந்து நமது புலியை அறிமுகப்படுத்துமுகத்தால், இப்புலிப்பட்டம் மைசூர் மகாராஜாவால் அவருக்கு அளிக்கப்பட்டதென்றும், எவ்வாறு புகழேந்திப் புலவர் வெண்பாவிற் புலியாக விளங்கினரோ அவ்வாறே இவர் சங்கீதத்திற் புலியாக விளங்குகின்றாரென்றும், நமது புலி தியாகராஜசுவாமிகளது சிஷ்யபரம்பரையினர் வழித்தோன்றலென்றும் கூறிமுடித்தார். அதன்பின் நமது புலி உறும ஆரம்பித்தது; பின் பாய ஆரம்பித்தது; இன்னும் என்னென்னவோ எல்லாம் செய்யத் தொடங்கியது. என்ன சங்கீதம்! என்ன பாய்ச்சல்கள்! என்னபிடிகள்! புலியின் அசைகள் முழுவதும் சங்கீதமயமாகவே இருந்தன. சிறிது நேரமும் இருந்துவிட்டால் இப் புலியின் ஆற்றலை இயம்பமுடியாதாகிவிடும். புலியின் பாய்ச்சல் ஒவ்வொன்றுக்கும் சபையிலிருந்த சங்கீத ஞானிகளது தலைகள் ஆடியவண்ணமாகவே இருந்தன. அங்கிருந்தவர்களிற் சங்கீதந் தெரிந்தோர்கள் எல்லோரும் மைசூர் மகாராஜா அளித்த பட்டம் தக்கதே ஆகும் என்று மனமுவந்து ஆமோதித்தனர். எனினும், ஒரு குறை நமது புலியைப்பற்றிச் சொல்லாமல் விடக்கூடாதல்லவா? பருந்து உண்மையைக் கூறுதற்குப் பயப்படாதல்லவா? கீர்த்தனங்கள் யாவும் முடிந்தன ஐயா! சங்கராபரண இராகமும் நன்றாக இருந்ததையா? பிடில் வாத்தியகாரரது திறமையும் மனதாரப் போற்றத்தக்கது தானையா? ஆயின், அடுத்தபடியாகச் "சில்லறை" என்னும் ஓர் விஷயம் நடைபெற்றது. இந்தச் சில்லறைதான் பெரிய பொல்லறையாக முடிந்தது. இது ஏதுவென்று கருத்துச் செலுத்திக் கேட்டுக் கொண்டிருந்த பருந்தின் செவியில் "வங்கார மார்பிலணி" என்னும் வார்த்தைகள் நாராசத்தைக் காய்ச்சி வார்த்தது போல விழுந்தது. இந்தச் சங்கீதப் புலிக்குத் திருப்புகழும் தேவாரமும் சில்லறையாகத்தோன்றி விட்டமையே வருந்தத் தக்கதாகும். ஆனந்த விகடன்போன்ற பத்திரிகைகள் இவர் போன்றாது இத்தகைய செயல்களைக் கண்டித்தும், அவர்கள் அதைப் பொருட்படுத்தாமை பற்றிப் பருந்துசிறிதுவருத்தமடையாமலிருக்க முடியவில்லை. இன்னும் இவ்விதம் நடந்துகொள்ள வேண்டாமென்று மாத்திரம் பருந்து நமது புலியை மிக மன்றாட்டமாக வேண்டிக் கொள்கின்றது.

* * *

நேற்றுமாலை, பருந்துக்குச் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் மற்றொரு சங்கீத விருந்து கிடைத்தது. விருந்தைப் பருந்து ஒருபோதும் மறப்பதில்லை. அதிலும் சங்கீதவிருந்தென்றால், அது தவறவிடுமா? அதிலும் வித்துவப் பெரியாராகிய பிரமஸ்ரீ டைகர் வரதாச்சாரியாரது சங்கீதத்தையும், பிரமஸ்ரீ அனந்தராமையர் பிடிலையும், பிரமஸ்ரீ இராஜகோபாலையர் மிருதங்கத்தையும் கேட்கவா பருந்து தவறும்? கரும்பு தின்னவுமா கைக்கூலிவேண்டும்? உடனே ஓரே பாய்ச்சலாக இறங்கிற்று. மழைக்கால் இருள் என்றதையும் பொருட்படுத்தவில்லைப் போய் உட்கார்ந்து கொண்டது நமது புலிக்கு அண்மையில். ஆ! என்ன சங்கீதம்! இதற்கு முன் பல சங்கீதவித்வான்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கிறார்கள்தான். முசிரி சுப்பிரமணிய ஐயர் வந்தார். செம்பை வைத்தியநாத பாகவதர் வந்தார். ஐயா! அவர்களையும் நமது புலியையும் பருந்து ஒப்பிட்டுப்பேச விரும்பவில்லை. அப்படிப் பேசுதற்கு அதற்கு அதிகாரமும் இல்லை. எனினும் அவர்கள் சங்கதிகள் இருக்கின்றனவே, அவை பெரும்பாலும் நமது புலியிடமிருந்து "காப்பி" அடிக்கப்பட்டனவாகவே தோன்றுகின்றன. அதனால், அவ்வித்துவப் பெரியார்களேனும் அல்லது அவர்

தொடர்ச்சி 5ம் பக்கம்.

## பருந்தின் வீழ்ச்சி

4ம் பக்கத் தொடர்ச்சி.

கள்மீது அபிமானம் கொண்டுள்ளாரேனும் பருந்தின்மீது காய்வு கொள்ளாதிருப்பாராக. நமது புலியின் உரோமத் துவாரங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் சங்கீதத்தேன் சொட்டிக் கொண்டே இருந்தது. காட்டுப்புலி மானைக் கிழிப்பது போலவே இந்நாட்டுப் புலியும் (நகரப்புலி போலும்) ஒவ்வொரு ராகத்தையும் "கிழிகிழி" என்று கிழித்தே விடுகிறது. பிடில் வாத்தியகாரரது திறமையும் இருந்தவர்களைப் பரவசப்படுத்தியேவிட்டது. அவரது பிடிலிலிருந்து விழுந்த மணிகளைப் பருந்து "கோக்கோ பொறுக்குகோ" என்றே பக்கத்திலிருந்த ஒருவரைக் கேட்கலாயிற்று மிருதங்கவாத்தியகாரரது திறமையும் பாராட்டுதற்குரியதாகும். இத்துடன் நமது புலியும் அவர் பரிவாரங்களும் இன்று மாலை கொழும்புக்குப் புறப்படுவார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களுக்குத் தன் மனப்பூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துவிட்டுப் பருந்து வெளிப்போந்துவிட்டது. டைகர் வரதாச்சாரி அவர்கள் நீடுவாழ்க. அவரை இங்கு தருவித்த ஸ்ரீஇராமநாதன் கல்லூரி அதிபர்களும் நீடுவாழ்க.

* * *

சங்கீத வித்துவ உலகில் ஈடுபட்டிருந்த பருந்து திடீரென வித்தியாவிநோத உலகைத் திருப்பி நோக்கிற்று. தாக்ஷிணாத்திய கலாநிதி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரது உருவம் அதன்முன் சென்பட்டது. இவ்வித்துவப் பெரியார் அண்மையில் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாட்கொண்டாட்டத்தில் தலைமை வகித்தார். அன்று பருந்தும் போயிருந்தது. ஆதலால் கல்வியிற் பெரியாராகிய அவரது ஆவலையும் அது நேயர்களுக்குத் தெரிவித்துவிட விரும்புகின்றது. அந்தணப் பெரியாராகிய இவர் காராளராக வருதற்கு விரும்புகின்றார் என்று பருந்து தெரிவிக்கின்றது. அந்தணரினும் காராளர் சிறிது உயர்ந்தவர்கள் போலும். இஃதென்ன நூதனப் என்று சிலர் நினைக்கலாம்? அப்படியல்ல. விஷயம் இதுவாகும். நமது வித்துவப் பெரியார் தாம் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் போது தமக்கு வயதாகிவிட்டதென்றும் கார் முதலிய வசதிகள் இல்லாமையால், தாம் தமது நண்பர்களை அடிக்கடி கண்டு அளவளாவ முடியாமலிருக்கிறதென்றும் தமக்குள்ள வருத்தத்தைத் துக்கத்தோடு தெரிவித்துக்கொண்டார். யாரேனும் அவர்மீது கருணை கொண்டு ஒரு காரை வாங்கிக் கொடுத்து அவரைக் காராளராக்கிவிட்டால் நல்லதென்று பருந்து தெரிவித்துக்கொள்கின்றது.

* * *

பருந்து வித்துவ உலகத்தைவிட்டு நாட்டுப்பக்க விவகாரங்களைச் சிறிது நாடிற்று. யாழ்ப்பாணத்தில் தொண்டைமானாற்றில் ஒரு விதானைவேலைக்கு இடமிருக்கிறது என்னும் செய்தியைக் கேட்டதும், பலர் அதைப் பெறுதற்கு வெகு பரபரப்போடு முயற்சித்து வருதலைப் பருந்து அவதானித்தது. இவ்விஷயத்தில் பருந்துக்குச் சிறிது ஊக்கமுண்டாயிற்று. ஏன்? இப் பகுதிகளில் கஞ்சா அபின் திருட்டு வியாபாரங்கள் அதிகம். இவை சம்பந்தமாகப் பல வழக்குகளும் நடைபெற்று வந்தன. ஆதலால், இத்தகைய இடத்தில் விதானையாராக ஏற்படுத்தப்படுவோர் தகக ஆற்றல் வாய்ந்தவராக இருக்க வேண்டும் என்பது அதற்குத் தெரியும். உடனே காலதாமதமின்றி கவர்ன்மெண்ட் ஏஜெண்டுக்கு ஓர் கடிதம் எழுதலாயிற்று. அதில் இந்தப் பகுதிக்கு விதானையை ஏற்படுத்துவதில் கவர்ன்மெண்ட் ஏஜெண்டார் மிக்க ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டுமெனறும், அவ்வூரிலுள்ள பல பெரியோர்களையும் கலந்து ஆராய்ந்து தக்கார் ஒருவரை விதானையாகத் தெரிவு செய்ய வேண்டுவது அவசியம் என்றும் ஆலோசனை கூறலாயிற்று. அது உண்மையேயாகும் என்று நாமும் ஆமோதிக்கின்றோம். அதன் பின்பு பருந்து மீண்டும் தனது வானபுரம் நண்ணிறறு. [வேண்டுவோர்..............

## சைவபரிபாலனசபை

### 48-வது வருஷ பூர்த்தி மகாசபைக் கூட்டம்

நிகழும் 1936-ம் ஆண்டு ஜூன்மீ 20-ந் திகதி சனிக்கிழமை பன்று (நேற்று முன்தினம்) மாலை 5 மணியளவில், சைவபரிபாலன சபையின் 48-வது வருஷ பூர்த்திமகாசபைக் கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது அனேக அங்கத்தவர் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர்.

சபையின் அக்கிராசனாதிபதி சுகவீனத்தால் வரமுடியாமையால்... [continued] சபையின் அக்கிராசனாதிபதி கண்டிக்குப் போயிருந்தமையால், உப அக்கிராசனாதிபதிகளுள் ஒருவராகிய திரு. இ. சிவகுருநாதர் தலைமை வகிக்க, தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயிற்று.

சென்றவருடப் பொதுக்கூட்ட அறிக்கைப்பத்திரம் படித்துச் சபையோரால அங்கீகரிக்கப்பெற்றது. 1935ம் - 36ம் ஆண்டுக்குரிய காரியதரிசியின் அறிக்கைப்பத்திர அச்சுப் பிரதிகள் சபையோருக்கு வழங்கப் பெற்றன. அப்பத்திரம் வாசிக்கப் பெற்றதாகச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. சபையோர் அதனை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்

கௌரவ தனாதிகாரியின் அறிக்கையும் சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சென்ற ஆண்டில் உத்தியோகஸ்தராக இருந்த அங்கத்தவர்களுக்கு திரு. வே. தி. சம்பந்தன் நன்றி கூறினார்.

1936-37ம் ஆண்டுக்குப் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அக்கிராசனாதிபதி முதலியார் அ. நாகநாதர் J. P. U. P. M

உப- அக்கிராசனாதிபதிகள் திருவாளர்கள் (1 அ. தில்லையம்பலம் (2 இ. சிவகுருநாதர்

காரியதரிசி திரு க. ஆ. கந்தப்ப சேகரம்

உப-காரியதரிசி திரு S. சிற்றம்பலம்

தனாதிகாரி திரு சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார்

நிருவாகசபை அங்கத்தவர்கள்:- திருவாளர்கள் கா. அருளம்பலம், சு இராசரத்தினம், பொ. இராஜகோபால், தி. கெ. சுப்பையா, த முத்துச்சாமிப்பிள்ளை, ச பாலசுப்பிரமணியம், இ. கதிரவேலு, டக்டர் சி. துரையப்பா, க நவரத்தினம், ச. அட்சலிங்கம் வ. நாகலிங்கம், க. மு. செல்லப்பா, க. இராமலிங்கம், சு நாகேந்திரம் C நடராஜா, வ இராமசாமி P சின்னத்துரை, சி மு. சின்னத்தம்பி, சி. செல்லப்பா.

கணக்குப்பரிசோதகர் திரு A. துரைசிங்க

புண்ணியநாச்சி தரும ஆதனங்களைப் பரிபாலனஞ் செய்வதற்காகப் பின்வரும் உபநிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் அ. தில்லையம்பலம், இ. சிவகுருநாதர், தி. கெ. சுப்பையா, சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார், கா. அருளம்பலம், க. ஆ. கந்தப்பசேகரம், த. முத்துச்சாமிப்பிள்ளை C. நடராசா, க. இராமலிங்கம், P. சின்னத்துரை.

இச்சபையின் நிர்வாகஸ்தராகத் திரு சிதம்பரநாதச்செட்டியார் நியமிக்கப்பட்டார்.

நிருவாகத்தொகையினர் (quorum) மூன்றுபேராக இருத்தல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மாலை 6-30 மணியளவில் தேவாரபாராயணத்தோடுகூட்டம் நிறைவெய்தியது அதன்பின் சபையோர் சிற்றுண்டி முதலியவை அருந்தி இன்புற்று ஏகினா.


### யாழ்ப்பாண நகரசங்கம் விளம்பரம்.

இச்சங்கத்துக்குச் செல்லவேண்டிய பணங்களை இச்சங்கத்தின் பொக்கிஷகாரன் (காஷியர்) அல்லது சங்கத்தால் நியமிக்கப்பட்ட வரி அறவிடுபவர்கள் வசம் அன்றி வேறெவரிடத்திலாவது ஜனங்கள் கொடுக்கப்படாதென்று இதனால் விளம்பரப் படுத்தப்படுகிறது.

R. R. Nalliah.
சங்கத்தலைவர்

நகரசங்க கந்தோர்
யாழ்ப்பாணம ஆனிமீ 18உ 1936-ம் ஆ
G. 29. 22 - 6 - 36


## தண்டவாளத்திற் கண்டெடுத்த பிரேதம்

### சாவகச்சேரிப் பொலிஸ்கோட்டில் விசாரணை

யாழ்ப்பாணம், 18உ

சென்ற மேமீ 8-ந் திகதியன்று யாழ்ப்பாணம் மெயில் றெயில் போய்க்கொண்டிருந்தபோது தண்டவாளத்தின்மீது செரியுண்ட இந்தியரது பிரேதம் ஒன்று கிடந்து கண்டெடுக்கப்பட்டது என்னும் விஷயம் இந்துசாதனத்தில் வெளிவந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இதன பலனாக, மேற்படி இந்தியரைக் கொலைசெய்ததாக சங்கரன் அப்புக்குட்டியின மனைவி சேதுப்பிள்ளை என்பவள் மீதும் சங்கரன அப்புக்குட்டியின மீதும பண்டாரி காத்தி என்பவன் மீதும் சாவகச்சேரிப் பொலிஸ் கோட்டில் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கில் சாவகச்சேரி வைத்திய அதிகாரி டக்டர் V. T. பசுபதி அவர்கள் பினவருமாறு சாட்சியங் கூறினார்:—

பிரேதத்தின்மீது றெயில் ஏறிச் சென்ற பினனர் அது என்ன நிலைமையில் கிடந்ததோ அதே நிலைமையில் நான் பார்த்தேன. கழுத்து துண்டிக்கப்பட்டிருந்தது. மிகக் குறைவாகவே இரத்தம அங்கு காணப்பட்டது. இறந்து சிறிது நேரத்திற்குப் பின்னரே பிரேதம் அங்கு வைக்கப்பட்டிருக்க வேண்டுமென நான் அபிப்பிராயப்படுகிறேன். றெயில் கழுத்தை மாத்திரம் துண்டித்திருக்கிறது. வேறு றெயிலால் ஏற்பட்ட காயம எதுவும கிடையாது. இதுதவிரக் காலகதியடைந்தவரது சரீரத்தில் சிலகாயங்கள் காணப்பட்டன. அநேகமாக அவர் விலா எலும்புகள் முழுவதும் முறிந்திருந்தன. தலையில் ஓர் பெரிய காயம் காணப்பட்டது. இந்தக் காயங்கள் றெயில் நசுக்கியதால் ஏற்பட்டிருக்க முடியாது. றெயில் கழுத்தைமட்டுமே துண்டித்திருக்கிறது. தலையிலுள்ள காயம் ஓர் கைக்கோடரி வெட்டால் ஏற்பட்டிருக்கலாம். உலக்கையைக் கொண்டு தாக்கியதால் விலா எலும்புகள் முறிந்திருக்கலாம். றெயில் பிரேதத்தை இழுத்திருப்பதாகத் தெரியவில்லை. தலை பாதையின் உள்பாகத்தில் இருந்தது. மற்றைப் பாகங்கள் வெளியே கிடந்தன.

மேலும், கந்தன் இளையவன். காத்தியின் மகளாகிய தெய்வி, றெயில் டிரைவர் திரு- கே. டொனதொம்ஸ், கார்டு திரு கே. இராமநாதன், பளை மணியகாரர் திரு. ச. ஆ. சந்திரசேகரா ஆகியோர் விசாரணைசெய்யப்பட்டபின நீதிபதிவழக்கோடுசம்பந்தமான பத்திரங்களை ஜூலைமீ 3-ந் திகதிக்குத் திரும்பிவரக்கூடியதாக அட்டோர்ணி ஜெனரலுக்கு அனுப்பிவைத்தார்.

### அபிஸீனியர் சமாதானப்படவில்லை

அடிஸ் அபாபாவில் "டேயிலிதேலிகிறவ்" என்னும் பத்திரிகையின் பிரதிநிதியாகவிருந்து இப்பொழுது டிபோஜியில் வசித்தும் பத்திரிகை நிருபர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:—

"இத்தலியர் கோச்சம் என்னுமிடத்தையொழிய, அடிஸ் அபாபாவுக்கு மேற்கே போதற்கு முயற்சி செய்யவில்லை. அடிஸ் அலம் என்னும் பட்டினத்தில் 5000 அபிஸீனியரும் அட்ஜிலியென்னுமிடத்தில் 1500 அபிஸீனியரும் அன்கபார் என்னுமிடத்தில் 1500 அபிஸீனியரும் தம் சுவாதீனத்தின்பொருட்டே யுத்தஞ்செய்தற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள். மாரிகாலம் வரும்போது இவர்கள் கலகஞ்செய்வரென நம்ப இடமுண்டு"

### தெல்லிப்பளை மகாஜன ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபகர் ஞாபகதினம்

மேற்படி தினம் இந்த மாதம 11ந் தேதி (24-6-36) புதன்கிழமைதெல்லிப்பளை மகாஜன ஆங்கில வித்தியாசாலையில் கொண்டாடப்படும். சென்ற 6 வருடங்களாய் நடந்தது போல் காலஞ்சென்ற ஸ்ரீமான் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக அன்றையதினம பகலில் ஏழைகளுக்கு அன்னமிடப்படும. பிற்பகல் 6½ மணியளவில் இந்துக் கல்லூரிப் பிரதமாசிரியர் ஸ்ரீமான். A. குமாரசுவாமி M. A. அவர்களின தலைமையின்கீழ் ஓர் கூட்டம் கூடும். அத்தருணம் "கல்வியும் பெறுநிலை ஒத்துழைப்பும்" என்னும் பொருள் பற்றி வித்தியாதரிசி ஸ்ரீமான் V K நாதன B. A. அவர்களும், "தற்காலக்கல்வியும் எமது வாழ்க்கையும்" என்னும் பொருள்பற்றி திருநெல்வேலிச் சைவ ஆசிரிய கலாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீமான் சி. சுவாமிநாதன் B. A. அவர்களும் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

# பருத்தித்துறைத் தேர்தலின் எதிரொலி

## வீட்டில் நுழைந்து சேதம் விளைத்ததாக வழக்கு

## எதிரிகளுக்கு 50 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15உ

சென்ற பொதுத்தேர்தலின் விளைவாகப் பருத்தித்துறைப் பொலிஸ் கோட்டில் ஒரு வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில், எண்மர் வீட்டில் நுழைந்து குழப்பஞ்செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டனர் எதிரிகள், சென்ற ஜனவரிமீ 26ந் திகதி பிற்பகல் திரு. வீரகத்திப்பிள்ளை சுப்பையாவின் வீட்டிற்குள் நுழைந்து அங்கு ஓர் அலுமாரிக்குள் இருந்தசாமான்களை எடுத்துச் சிதறியதாகவும், ஒரு தையல் மெஷினையும் ஸ்கிரீனையும் பழுது படுத்தியதாகவும் கூறப்பட்டது.

எதிரிகளின் பெயர்கள் வருமாறு: (1) திரு ஆர். வ. கந்தசாமி, (2) திரு ஆர். வ. பொன்னுத்துரை (3) திரு எஸ் சுந்தரலிங்கம் (4) சின்னக்கண்டு (5) எஸ் பொன்னுத்துரை (6) முருகேசு (7) இராமலிங்கம் சுப்பிரமணியம் (8) இளையதம்பி விசுவலிங்கம்.

முதலாவது சாக்ஷியாகிய திமயில்வாகனம் என்பவர் கூறியதாவது:-

எதிரிகள் எல்லோரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள் நான் எதிரிகளைப் பின்தொடர்ந்து சென்று அறைக்குள் நுழைந்தேன். அங்கு இரு பெண்களும், ஒரு குழந்தையும் நின்றனர். அவர்கள் அழுதார்கள். நீங்கள் பயப்படாதீர்கள் என்று நான் அவர்களைத் தேற்றினேன்.

முதலாம், இரண்டாம் நான்காம் எதிரிகள் அடுத்த அறைக்குள் நுழைந்தார்கள், நானும் அவர்களைத் தொடர்ந்தேன். முதலாம் எதிரி அங்கிருந்த அலுமாரியை ஆதிலிருந்த சாவியால் திறந்தார. பின் எதிரிகள் மூவரும் அங்கிருந்த சாமான்களை எடுத்து நாலுபக்கத்திலும் எறிந்தார்கள்.

ஒரு ஸ்கிரீனையும் உடைத்தார்கள் எதிரிகள் எல்லோரும் ஏகோபித்தே இதனைச் செய்தார்கள். வாங்கின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு தையல்மெஷின்விழுந்துஉடைந்தது"

குறுக்கு விசாரணையின்போது சாக்ஷி கூறியதாவது:—

எதிரிகள் போனபிற்பாடு, இராஜசேகரம், கந்தசாமி, அத்வக்காத் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியவர்கள் வந்தார்கள். இராஜசேகரம் உடைந்திருந்த சாமான்களைப் பொலிஸ் சாஜனுக்குக் காட்டினார். இராஜசேகரத்தைத் தவிர வேறொருவரும் ஒன்றுங் கூறவில்லை எதிரிகள் விட்டிற்குள் வந்தபோது கதவின்பக்கம் பிடுங்கப்பட்டு விட்டது எதிரிகள் அதன் வாயிலாகவே போனார்கள் தேர்தலில் நான் திரு. ஜீ ஜீ- பொன்னம்பலத்தின் சார்பாக வேலை செய்தேன். திரு பாலசிங்கத்திற்காக வேலை செய்யும்படி திரு சுப்பையா என்னைக் கேட்டுக்கொள்ளவில்லை."

ஸ்ரீமதி ஞானம்பாள் சாக்ஷியம்

அடுத்தபடியாக விசாரணை செய்யப்பட்ட ஸ்ரீமதி ஞானம்பாள் இராஜேந்திரா கூறியதாவது:—

எனது புருஷன் ஒரு வைத்தியமாணவர். அவர் இப்போது இந்தியாவில் இருக்கின்றார் மேற்படி சம்பவம ஜனவரி மீ 26ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது. அப்போது நானும, விவாகமாகாத எனது சகோதரி இரத்தினம்பாளும் இரத்தினலிங்கம் என்னும் என் சொந்தக்காரர் ஒருவரும் வீட்டில் இருந்தோம். ஒரு கார் வந்து வாசலில் நின்ற சத்தம கேட்டது. நான் அப்போது வீட்டின் உள் விறாந்தையில் நின்றேன். உடனே வெளிவிறாந்தைக்கு வந்தேன். முதலாம் இரண்டாம், நான்காம் எதிரிகள் வேறும் சிலரோடு வீட்டிற்குள் நுழைந்தார்கள். எதிரிகளோடு வந்தவர்களை எனக்கு முன் பழக்கமில்லை ஒருமிக்க 10 12 பேர் வந்தார்கள்.

### "வைதார்கள்"

நான் உடனே கதவைச் சாத்தி அதற்கு ஒரு படுக்கையைத் தடையாக வைத்துவிட்டுச் சத்தமிட்டேன். எதிரிகள் சாமான்களை எடுத்து எறிந்த சத்தம் கேட்டது. எனது மாமா திரு. மயில்வாகனம் வெளியே நின்று "நான் இருக்கிறேன், பயப்படாதேயுங்கள்" என்று சொன்னார் எதிரிகள் கதவில் உதைத்து வாயில் வந்தபடி தூஷணமாகப் பேசினார்கள். முதலாம் எதிரியின் குரல் எனக்குக் கேட்டது. பிறகு எதிரிகள் ஓடிவிட்டார்கள். எதிரிகள் விறாந்தைக்கு வரு முன்னமே நான் அறைக்குள் நுழைந்துகொண்டேன்." சாக்ஷியின் குறுக்கு விசாரணை இம்மாதம் 20ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது,

பருத்தித்துறை 20உ

இவ்வழக்கும் இன்று மீண்டும் நீதிபதி திரு சைமன் றொட்ரிகோ முன்பாகவிசாரணைசெய்யப்பட்டது. T இரத்தினலிங்கம் என்னும் மாணவனும், ஸ்ரீமதி ஞானம்பாள் இராஜேந்திராவும், வழக்காளியாகிய திரு. வீ. சுப்பையாவும் விசாரணை செய்யப்பட்டனர். திரு. வீ. சுப்பையா கூறிய சாக்ஷியமாவது:-

நான் ஒரு பென்ஷனர். சலாங்கூர் செக்கிரிட்டேரியட்டில் நான் ஒரு பிரதம கிளாக்காக வேலைபார்த்தேன். வேலையினின்றும் இளைப்பாறிய பின் வர்த்தகம் செய்பவரானேன். குறித்த தினத்தன்று, முதலாம் எதிரி என்னை அவமதித்தது சம்பந்தமாக எதிரிமீது நான் ஒரு வாரண்டை எடுத்தேன். பிற்பகல் 4 மணிக்கு நான் வீடு திரும்பினேன். வீட்டில் நடந்த சம்பவத்தைப்பற்றி வல்வெட்டித்துறையிற் கேள்விப்பட்டேன்; ஆகவே நான் தனிமையாக வீட்டுக்குப் போதற்குப் பயந்து வல்வெட்டித்துறையிலிருந்து ஒரு பொலிஸ் சார்ஜனையும் ஒரு கன்ஸ்டபிளையும் அழைத்துக்கொண்டு போனேன். பொலிஸாரின் முன்பாகவே எனது மகள் நடந்ததைத் தெரிவித்தாள். எனது மகள், கந்தசாமி, பொன்னுத்துரை, சின்னக்கண்டுஎனபவர்களது பெயர்களையே கூறினாள். நான் மயில்வாகனத்தையேனும் இரத்தினலிங்கத்தையேனும் அங்கு காணவில்லை. எனது சகோதரர்வீட்டுக்குப் போனபோது அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். சார்ஜன் அவற்றைப் புத்தகத்தில் குறிப்பிட்டார். பழுதடைந்த ஸ்கிரீனின் விலை 8 ரூபா; தையல் மெஷினைத் திருத்துதற்கு 7 ரூபா சதம 50 சதம செலவாயிற்று.

மேலும் சாக்ஷி குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். அதில் சாக்ஷி, முதலாம எதிரிக்கெதிராக வாரண்ட் எடுத்தது சம்பந்தமாக முதலாம் எதிரிக்குத் தன்மீது கோபமேற்பட, அதுகாரணமாக, அவர் தேர்தலில் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் வெற்றியடைந்தபோது, தனது வீட்டில் ஒரு சிவப்புக்கொடியைக் கட்டிவிட்டாரென்றும் தான அதை அப்புப்பிக்க நேர்ந்ததென்றும் தெரிவித்தார்.

விசாரணையின் பின் நீதிபதி எதிரிகள் வீட்டில் நுழைந்த குற்றவாளிகள் எனக்கண்டு எதிரிகளுக்குத் தனித்தனி 50 ரூபா அபராதம் விதித்தார்.

## "நடுவேனிற் பைத்தியம்"

### மிஸ்ரர் சேம்பர்லேன் பிரசங்கம்

லண்டன் ஜூன் 13—

இத்தாலிக்கெதிரான நிர்ப்பந்த முறைகளை நீக்கவேண்டுமென்பதை யாதரித்து, மிஸ்டர் நெவில் சேம்பர்லேன் செய்த பிரசங்கம் ராஜதந்திரிகளிடையே வியப்பையும் பரபரப்பையும் உண்டுபண்ணியிருக்கின்றது. அதைப்பற்றிப் பேசுவதற்காகப் பிரெஞ்சு, பெல்ஜிய ஸ்தானிகர்கள் பிரிட்டிஷ் வெளிநாட்டுக் காரியாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். நெவில் சேம்பர்லேன் வெளியிட்ட அபிப்பிராயத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் உத்தியோக தோரணையில் ஆதரிக்கவில்லை யாயினும் பிரெஞ்சு, பெல்ஜிய அதிகாரிகள் விடைப்புக்கொண்டுவிட்டனர்.

ஆர்ஜெண்டைனா கோரிற்றென்ற காரணங் காட்டி நிர்ப்பந்த முறைகள் நீககத்தை யாதரிப்பது பிரிட்டனைப்போன்ற வொரு பெரிய நாட்டின் கௌரவத்திற்குப் பொருந்தாத காரியமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகவே அவர்களே இவ்விஷயத்தில் வழிகாட்டுவார்கள். நிர்ப்பந்தமுறைகளை யாதரித்தபோதிலும், அபிஸீனியாவை இத்தாலி தன்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டதை யங்கீகரிக்கும் உத்தேசமில்லை.

ஜூன்மாதம் 22-ம் தேதியன்று காமன்ஸ்சபையில் வெளிநாட்டு விவகாரத்தைப்பற்றி விவாதம் நடைபெறக்கூடுமென்று பத்திரிகை நிருபர்கள் சொல்லுகின்றனர். ஆக்ஸ்போர்டில் மேஜர் ஆட்லியும், தெற்கு வேல்ஸில் டேவிஸ் பிரபுவும் பொதுக் கூட்டங்களில் பேசும்போது மிஸ்டர் சேம்பர்லேனின் பிரசங்கத்தைப் பலமாகக் கண்டித்தார்கள்.

#### பிரச்னை வரலாறு

சென்றபுதன்கிழமை மாலை ஒரு விருந்தில் பேசியபோது மிஸ்டர் நெவில் சேம்பர்லேன், நிர்ப்பந்த முறைகளைப் பெருக்க வேண்டுமென்று ஸெஸில் பிரபு விடுத்த வேண்டுகோளைக் கண்டித்துப் பேசினார். இவ்வேண்டுகோள் "நடுவேனிற் பைத்திய"மென்றும் அவர் சொன்னார். கூட்டு ஒப்பந்த முறையை அடிப்படையாகக் கொண்ட சர்வதேசசங்க நடைமுறை தவறிவிட்டதென்றும் அவர் குறிப்பிட்டார். தம் சொந்த அபிப்பிராயத்தையே மிஸ்டர் சேம்பர்லேன் வெளியிட்டாரெனப் பிரதம மந்திரி சமாதானம் கூறினார்; ஜூன் 26ம் தேதி சர்வதேசசங்க நிர்வாகசபை கூடுகிறது; அப்போது பிரிட்டிஷ் சர்க்கார் நடைமுறை எப்படியிருக்குமென்று சொல்லுவதற்கில்லை.

## தேகவியோகம்

### ஸ்ரீமதி. சின்னாச்சியம்மை

கோப்பாய் வடக்குச் சரவணபவானந்த வித்தியாசாலை (முதலாந் தரதரபத்திரம் பெற்ற) ஆசிரியையும் ஷெ பாடசாலை ஆசிரியர் திரு. சி. விசுவலிங்கமவர்களின் பிரிய பத்தினியும், ஆசிரியர் திரு. சண்முகமவர்களின் அரிய சோதரியுமாகிய ஸ்ரீமதி சின்னாச்சியம்மையார் தமைப் பீடித்த நோய் காரணமாகத் தமது 31 வயதுபாராயத்தில் 12-6-36 வெள்ளிக்கிழமை இரவு 3-30ல் மண்ணுலகொருவினர்.

அவரையிழந்து துன்புறும் ஏகபுத்திரன் (பழமொழிதானுப்பிறவாத சிறுகுழந்தை) பெற்றார், உற்றார் நட்டார் முதலியோருக்கு முதாபப்படுகின்றோம்.

## திரு. தாமஸ் இராஜினாமா

### இடைத்தேர்தல்

லக்பி, 11

திரு ஜே. எச் தாமஸ் பார்ச் ஆல்ப்பாட்டும் பார்லிமெண்டில் தங்களுடைய ஸ்தானங்களை ராஜினாமாச் செய்திருப்பதால் அவர்களுடைய தொகுதியாகிய டெர்பிக்கும், பால்ஹாம்-டூட்டிங் தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடைபெறவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

## மயிலணையாவளைத் தாக்கிய மயில்கள்

### மங்கை படுகாயமடைந்தாள்

#### கொத்திச் சிறகால் அடித்தன

விருதுநகர், ஜூன் 12—

நகருக்கு வடக்கே கள்ளிக்குடியை அடுத்துள்ள ஓடப்பட்டி கிராமத்தில் மயிலினங்கள் அதிகம். சென்ற 11ந்தேதி யன்று மத்தியானம் வீட்டின்மேல்தளத்தில் கோடை மகசூல் சோளத்தை வெய்யிலில் காயப் போட்டுவிட்டு இருளம்மாள் என்னும் நாயுடு வம்சப் பெண் காவலிருந்து கொண்டிருந்தாள் என்றும், 10 மயில்கள் அங்கு வந்து சோளத்தைக் குத்தித் தின்ன ஆரம்பிக்கவே அப்பெண் அவைகளை விரட்டினாளென்றும், மயில்கள் கோபங்கொண்டு குத்தியும் சிறகுகளாலடித்தும அப்பெண்ணைக் கோரமாய்த் தாக்கினவென்றும் தெரிகின்றது. பெண் கதறிக் கூக்குரலிடவே அக்கம்பக்கத்தார் கூடி மயில்களை அடித்து விரட்டினர்; படுகாயமடைந்த பெண் சிகிச்சை பெற்று வருகின்றாள். சம்பவத்திற்குப் பின் நெடுநேரம் மயக்கிக்கிடந்தாளென்றும் தெரியவருகின்றது.

## சேம்பர்லேன் சிறுவனைக் காப்பாற்றினார்

ரக்பி, 11வ

பொக்கிஷ மந்திரி திரு நெவில் சேம்பர்லேன் இன்று வழக்கம்போல் சந்த் ஜேம்ஸ் பூந்தோட்டத்தில் உலாத்திக்கொண்டிருந்தார். வாத்துக்களைக் கரையோரமாகக் கவனித்துக்கொண்டிருந்த ஓர் சிறுவன் தவறி தடாகத்தில் விழுந்துவிட்டான். உடன் திரு. சேம்பர்லேன் குனிந்து சிறுவனைத் தடாகத்திலிருந்து வெளியேற்றி அவனுடைய தாதியிடம் ஒப்படைத்தார்.

## கமலாநேரு ஞாபக நிதி

### மிஸஸ் ராமலிங்கத்தின் நன்கொடை

பங்களூர், ஜூன் 15—

மிஸஸ் ராமலிங்கம், கமலாநேரு ஞாபக நிதிக்குக் கொடுத்த 1000 ரூபாய் நன்கொடையை மகாத்மாஜீ நன்றியறிதலுடன் ஏற்றுக் கொண்டார்.

## மணமகன் கைது

திப்ருகார், ஜூன் 15—

மூர்ஷிதாபாத் ஜில்லா கண்டி நகரைச் சேர்ந்த வங்காள பிராமண வாலிபர் ஒருவர், ஜெஸ்ஸோரைச் சேர்ந்த மற்றொரு பிராமணரின் விதந்துவான பெண்ணை விவாகம் செய்து கொள்ளுவதற்காக இங்கு வந்திருந்தார். 13-ந் தேதி இரவு விவாகம் நடப்பதாக இருந்தது. கல்யாணத்திற்குப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். விவாகத்திற்கான ஏற்பாடுகளெல்லாம் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் 12-ந் தேதி மாலை கண்டியிலிருந்து திப்ருகாம் பொலிஸாருக்குத் தந்தி மூலம் மணமகனைக் கைதுசெய்யுமாறு வாரண்டு வந்தது. சிலகூரி மோசடி வழக்கில் அவன் எதிரி என்றும் பொலிசார் வசம் அகப்படாமல் தலைமறைவாக இருப்பதாகவும் அத் தந்தியில் சொல்லப்பட்டிருந்ததால் பொலிசர் அவனைக் கைதுசெய்து பொலிஸ் காவற்கூடத்தில் வைத்திருக்கின்றனர். அவன் சிலிகூரிக்கு பொலிஸ் பார்வையுடன் அனுப்பப்படுவான்.

## பிரஞ்சு மாது ஹிந்துவானாள்

கல்கத்தா, ஜூன் 1-

பிரிஸ் கிறிஸ்துவாலயத்தைச் சேர்ந்த "ஸ்ரீமதி" மார்ஸிமி யாளியோர்ட்டெக்ஸ் (எம். ஏ. )என்ற பிரஞ்சுபெண் பல பிரமுகர்களுக்கு முன்னிலையில் இன்று ஹிந்து மதத்தைத் தழுவினாள். அவளுக்கு சாவித்ரி தேவியென நாமகரணம் செய்திருக்கிறார்கள்.

## பலாலியில் கத்தி வீச்சு

### எதிரிக்கு விடுதலை

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பலாலியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை—தம்பிப்பிள்ளை என்னும் ஓர் வேளாளன் அவ்வூர் சின்னப்பொடியன் — நாகமுத்தன் என்னும் ஓர் கோவியனைக் கத்தியால் குத்திப் படுகாயப் படுத்தியதாகக் குற்றம் சாட்டித் தொடர்ந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இவ் வழக்கில் எதிரியாகிய சிதம்பரப்பிள்ளை — தம்பிப்பிள்ளை கூறிய சாட்சியமாவது,—

எனக்கு வயது 22. நான் கமஞ் செய்பவன். இவ் வழக்கில் நானே எதிரி; இச் சம்பவம் மதருக்கு அருகாமையிலேயே நடைபெற்றது; இச் சம்பவம் நடப்பதற்கு முன், நான் விதானையார் வீட்டுக்குப் போய் அங்கு விதானையாரைக் காணாமையால் மதகடியில் வந்து நின்றேன்; எதிரியைச் சந்தித்தேன். அவர் இடது கையில் புகையிலைக் கன்றுக் கூடையும் வலது கையில் ஒரு சத்தகமுங் கொண்டு வந்தார். வழக்காளி என்னைப்பார்த்து "நான்தான் உனது புகையிலைக் கன்றுகளைப் பிடுங்கி அழித்ததாக நீ கயிலாய பிள்ளைக்குச் சொன்னாயாம்; அது உண்மைதானா" என்று கேட்டுச் சத்தகத்தை ஓங்கிக் கொண்டு வந்தார். நான் அவரது கையைப் பிடித்துக் கத்தியைப் பறிக்க முயன்றேன். கத்தியை ஒரு விதமாகப் பறித்ததும் பக்கத்தே இருந்த ஒழுங்கையால் சென்று விட்டேன். வழக்காளி என்னை வெட்டிப்போடுவார் என்ற பயத்திலேயே கத்தியைப் பறிக்கலானேன்.

விசாரணையின்பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளி யல்லவெனக் கண்டு விடுதலை ஆக்கினார். [ந. நி.]


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானா, சாலா முஸ்லி, சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரச் பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

Y46 1-1-36 to 31-12-36) இலோன்.



## சிவன் வேப்புத் தைலம்.

செம்மேகம், கருமேகப் பத்தக்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, தடிப்பு, கிரந்தி, சாப்பான் புண்களும்; விஷ சடிகள் மேகஊறல், கக்கூம்பதத்கள், சொறிசிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய சூலை ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌந்திரம், சிங்கப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பத்து, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம்.

12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.
தீராதெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக் கணக்கில் குணமாகிவிட்டன.

### தாளக பஸ்பம்.

இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அனலாயிருத்தல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சீராய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல், இனிப்புத் தோன்றல், பசிமந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.

### இருமல், இளைப்பு சுகம்.

என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தூக்கமறல், நான்குவருஷ இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.

(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.

தாளக பஸ்பம், அநுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.
குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்,

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
(Q 19. 27-4 to 26-7-36) தி (PALNI. S. 1.)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

### பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

### தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

### தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

### கடன்.

நகைகளை ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.
(Y.203. 21.11.35—20.11.36) (தி.)



## வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)
2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்னாபாங்க்" தெலிபோன் இல. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்தில் ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12விகித வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலும் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், நோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கப்பற்தண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறக்கத் தக்கதாக, கமிஷனின்றி கப்பற்தண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
மனேஜர்.
(Y. 188. 21.10-35—20-10-36.) தி



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## கனிஷ்ட பாடசாலை விடுகைத் தாரதரப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக்கும் ஆவசியகம் வேண்டியது. விலை சதம் 80.


### செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.
விலை சதம் 75.

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
வண்ணார்பண்ணை,
Mis 12. 13-4-36.) தி

வேலைசெய்யும் திறத்தையோ
நீடித்த பாவிப்பையோ
விலையையோ

எதை நீங்கள் பார்த்தாலும்



மொரிஸ்—கொம்மர்ஸல்

டிரக்ஸ்

உங்கள் பணத்தைப் போட்டுவைப்பதற்குத் தகுந்ததாகும்.

வேண்டுவோர் எழுதி விபரம் அறிந்துகோள்ளலாம்.

சோல் ஏஜென்ட்ஸ்

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட்
கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜென்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி றேட்டு, யாழ்ப்பாணம்.

Y137. 19-8-35. — 18-8-36.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் வட்டு மேற்கு வட்டுக்கோட்டை க. செ. இராசதுரை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1933-ம் ஆ. 6-ம் மீ

| நம். | உ. | ரு. | ச. | பெயர். | ஊர் | நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 141 | 1 | 7 | 00 | ச. ஆறுமுகம்பிள்ளை | வட்டுமேற்கு | அச்சரக்கூடு 1 |
| 1934-ம் ஆண்டு 3-ம் மீ | | | | | | |
| 277 | 25 | 15 | 00 | இ. தர்மராசா | ,, ,, | அச்சரக்கூடு 1 |
| 5-ம் மீ | | | | | | |
| 372 | 15 | 10 | 00 | க. வேலன் | ,, ,, | வாளி ஒருசோடி |
| 393 | 21 | 6 | 00 | புன்னன் மயிலன் | ,, ,, | முதிச் மோதிரம் 1 |
| 8-ம் மீ | | | | | | |
| 581 | 19 | 20 | 00 | கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் | ,, ,, | கிறச் 1 வாளிசோடி 1 |
| 9-ம் மீ | | | | | | |
| 620 | 1 | 8 | 00 | வயிரவன் வயித்தியன் | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 641 | 9 | 10 | 00 | வயிரவன் வயித்தியன் | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 655 | 14 | 6 | 00 | வயிரவன் வயித்தியன் | ,, ,, | காதில பூ ஒருசோடி |
| 663 | 17 | 100 | 00 | வீரசிங்கம் நடராசா | ,, ,, | செட்டிக்காப்பு சோடி 1 |
| 678 | 25 | 10 | 00 | சின்னக்குட்டி முருகேசு | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 10-ம் மீ | | | | | | |
| 724 | 17 | 35 | 00 | செல்லப்பு நாகலிங்கம் | ,, ,, | சிறுபிள்ளைக்காப்புசோடி 1 |
| 735 | 22 | 7 | 00 | வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 11-ம் மீ | | | | | | |
| 757 | 4 | 8 | 00 | வயிரவன் வயித்தியன் | ,, ,, | காதில் பூ ஒருசோடி |
| 822 | 23 | 7 | 00 | நா. கந்தையா | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 12-ம் மீ | | | | | | |
| 838 | 4 | 30 | 00 | அ. கணபதிப்பிள்ளை | ,, ,, | காதோலை ஒருசோடி |
| 848 | 9 | 14 | 00 | நா. மார்க்கண்டன் | ,, ,, | அச்சரக்கூடு ஒன்று |
| 875 | 26 | 6 | 00 | நா. சின்னப்பொடியன் | ,, ,, | தாலி ஒன்று |
| 890 | 31 | 14 | 76 | க. பாதி | ,, ,, | மணிஅட்டியல் ஒன்று |
| 1935ம் ஆ. 1ம் மீ | | | | | | |
| 908 | 12 | 12 | 00 | க. வேலுப்பிள்ளை | ,, | தாலி ஒன்று |
| 2ம் மீ | | | | | | |
| 985 | 6 | 10 | 00 | சி. இராமு | ,, | காதோலை 1 சோடி |
| 1016 | 19 | 25 | 00 | க. சுப்பிரமணியம் | ,, | காதுக்குச்சி 1 சோடி, குண்டுச் [சங்கிலி 1] |
| 3ம் மீ | | | | | | |
| 1062 | 15 | 40 | 00 | கா. கந்தையா | ,, | அரைத்தங்கப்பவுனுடன் குண்டுச் சங்கிலி ஒன்று |
| 1066 | 16 | 80 | 00 | வே. முதலையா | ,, | பட்டத்திரத்த காப்பு ஒருசோடி |
| 1075 | 21 | 10 | 00 | க. முருகுப்பிள்ளை | ,, | குவளைக்கடுக்கன் ஒருசோடி |
| 5ம் மீ | | | | | | |
| 1255 | 29 | 25 | 00 | கா. மாரிமுத்து | ,, | கிறச் ஒன்று |
| 6ம் மீ | | | | | | |
| 1267 | 3 | 60 | 00 | சி. கிருசித்தம்பி | ,, | முகப்புடன் பட்டத்திரத்த காப்பு 1 சோடி |

விற்பனவு: தாதுஸ ஆனிமீ 32ந் திகதி (15-7-36) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அடுபட்டநகை பிறகேலதாக மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

N. P. Apper,
Auctioneer.

(Mis. 56. 18 & 22-6-36)

## மூட்டையில் சிறுவன்

### ரயில்வே ஸ்டேஷனில் கண்ட விநோதம்

குஜரான்வாலா, ஜூன் 14

லாகூரிலிருந்து வந்த ரயில் வண்டி குஜரான்வாலா வந்து சேர்ந்ததும் ஒரு வண்டியின் மேலிருந்து ஒரு சாக்கு மூட்டை கீழே விழுந்தது. அந்த மூட்டையினின்று அழுகுரல் கேட்பதைப் பிரயாணிகள் கவனித்து ரயில்வே அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். கைத்திருந்த அந்தக் கோணி மூட்டையை அவிழ்த்துப்பார்க்க அதில் ஒரு சிறுவனிருக்கக் கண்டு பலரும் திகைத்தனர். அவன் முகம் வெளுத்திருந்தது. அவனை விசாரித்ததில் அவன் பெஷாவரில் படிக்கச் செல்லுகையில் ஒரு பட்டாணி தன்னைப் பிடித்து மூட்டையில் போட்டு பிடித்துக்கொண்டு வந்ததாகக் கூறினான். போலீஸார் சிறுவனை அழைத்துச் சென்றார்கள் அவர்கள் பட்டாணியனைத் தேடி வருகிறார்கள்.

## மாணிக்கவாசகர் குருபூசை

மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வருகிற புதன்கிழமை நிகழும். யாழ்ப்பாணத்திலே யுள்ள சைவக்கல்லூரிகள் சைவ ஆங்கில தமிழ் வித்தியாசாலைகளில் சமயகுரவருளொருவராகிய மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை சிரத்தையோடு கிரமமாகச் செய்யப்பெறுவதாகும்.

## குழந்தைகள் சோரம்

புதிய ஜூன் 15—

சிறுவர்களைத் திருட்டுத்தனமாக அழைத்துச்சென்று பிறகு பணம் கொடுத்தால் விடுவதாகச் சொல்லும் வழக்கம் அமெரிக்காவிலிருக்கிறது. அது இப்போது டில்லியிலும் அனுஷ்டிக்கப்பட்டதாகச் செய்தி எட்டுகிறது. டாக்டர் எ. டி. ஷாப் என்பவரின் 11 வயதுப் பிள்ளையை யாரோ தூக்கிச்சென்று விட்டார்கள். மூன்று முஸ்லீம்கள் இவரிடம் வந்து தங்களுக்குப் போதிய பணம் கொடுத்தால் சிறுவன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிப்பதாகச் சொன்னதால் அவர்கள் மீது தமக்குச் சந்தேகமிருப்பதாகப் பொலிசாரிடம் பிராது கொடுத்தார். ஜனாப் தீன் முகம்மது என்பவரின் 11 வயது புத்திரன் இவ்விதமே களவாடப்பட்டிருக்கிறான். போலீஸார் இதைப்பற்றி விசாரித்து வருகின்றனர்.

## நாகம் நாய் சண்டை
### இரண்டும் இறந்தன

தங்காலை, ஜூன் 17—

இந்நகரிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள அரண்வெலை என்ற கிராமத்தில் ஓர் நாயும் நாகமும் சண்டை போட்டுக் கொண்டன. ஒன்றை மற்றொன்று கொன்றுவிட்டது.

நாகபாம்பின் உடலின் மத்திய பாகத்தை நாய் வாயால் கௌவிக் கீழே அடித்ததாகச் சண்டையைப் பார்த்த சிலர் கூறுகின்றனர். பாம்பும் நாயைப் பன்முறை தீண்டியதாம். சுமார் 10 நிமிஷங்களுக்குப் போர் மும்முரமாக நடந்தது. முடிவில் பாம்பு செத்தது அதன் உடல் சிதறிப்போய்க் கிடந்தது. நாய் சில நிமிஷங்களுக்குக் கீழே படுத்துக்கொண்டு தனது உடலை நக்கியது. பின் அதுவும் இறந்து போயிற்று

## வெண்பாவில் புகழேந்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"வென்றிவளவன் விறல்வேந்தர் தம்பிரான்" என்றும் "முறுகிக்கிடான் கலசம் — துன்றும்" என்று கூறி ஆலோசிக்கப் புகழேந்திப் புலவர் "வெறியார் தொடை கமழும் மீனவர் கோன்கைவேல், எதியான் புறங்கொடுக்கின்" என்று தம் அரசனை வீர வேந்தனுக்குப் பாடி முடித்தார் இன்னனம் தாம் பாடியவற்றிலும் சிறந்த பாடல்களைப் பாடிய புகழேந்திப் புலவர்மீது கூத்தருக்குப் பொறாமை உண்டாயிற்று

—(தொடரும்)

## சைவ பரிபாலன சபை.
### 1909-ம் ஆண்டில் நிகழ்ந்தவை.

(15-6-36ன் தொடர்)

ஸ்ரீ ஆ. சரவணமுத்து அவர்கள் பிரேரிக்க ஸ்ரீ அ. சபாபதி அவர்கள் அநுவதிக்க அதிகாரசபையிலே வெறுமையாயுள்ள இடங்களுக்குப் பின்வரும் பிரபுக்கள் நியமிக்கப்பட்டார்கள்:— ஸ்ரீ வை. துரைசுவாமி, கா. செல்லத்துரை, கா. அருளம்பலம், வ. மு. முத்துக்குமாரு, C. K. சுவாமிநாதன், வே. மு. முத்துவேற்பிள்ளை, பொ. இராஜகோபால், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ சி. தம்பையாபிள்ளை அவர்கள் பிரேரிக்க திருவாக சபையிலே வெறுமையாயுள்ள இடங்களுக்குப் பின்வரும் பிரபுக்கள் நியமிக்கப்பட்டார்கள்:-ஸ்ரீவை. துரைசுவாமி, கா. செல்வத்துரை.

ஸ்ரீ அ. சபாபதி அவர்கள் பிரேரிக்க ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்கள் அநுவதிக்க வெறுமையாயுள்ள பின் காட்டப்படும் இடங்களுக்குப் பின்வரும் பிரபுக்கள் நியமிக்கப்பட்டார்கள்:– உதவி இலேககர் வ. மு. முத்துக்குமாரு. தனாதிகாரி ச. சிவகுருநாதர். கணக்குப் பரிசோதகர் அ. சின்னப்பா" இது இப்படியிருக்க,

இச்சபையின் பிரதி அக்கிராசனாதிபதியாயிருந்த அத்துவக்காத்து நாகலிங்கத்தின் சிரேஷ்ட புத்திரி முத்தம்மா என்கிற செல்வநாயகி, தமது தந்தையாராகிய நாகலிங்கம் அவரது ஆபிசிலே வைத்துப் பாவித்த மேசை, நாற்காலி, பங்கா என்பவைகளை இந்துக்கல்லூரிக்கு உதவலானார். கல்லூரி நடுமண்டபத்திலே இன்றும் தொங்கிக்கொண்டிருக்கும் பங்கா செல்வநாயகி உதவியதாகும். அதை அங்கு 1909ஆ ஆனிமீ தூக்குவித்தவர் மாவடித்தம்பி என வழங்கிய இ. இரகுநாதராவர்.

### XI. பரிசளிப்பு.

இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு 1909ஆ ஆனிமீ 9௳ வடமாகாண அதிகாரியாயிருந்த F. H. Price தலைமையில் பரிசளிக்கப் பட்டது. அப்போது பிரதமாசிரியர் N. செல்வத்துரை வாசித்த அறிக்கைப் பத்திரத்திலோர்பகுதி இது:—

"Strength and Attendence.

There were 468 boys on the roll in December 1907. The number increased to 561 in December 1908. The average number on roll for 1907 was 463 and that for 1908 was 546. The average daily attendance for 1908 was 415, giving a percentage of 76. The percentage of attendance may be raised a little if the parents will help us by not indulging the boys to keep away from school for slight and trifling causes. Regularity and punctuality besides helping the boy to do well in his class are very essential to success in after life. These habits if they are formed in early life will almost become a part of the boy's nature when he grows to manhood.

The present staff consists of the principal, 3 lecturers, 15 assistant masters and a Tamil Pandit.... Mr. M. Sabapathy, who was on the staff from the time the school was started and who was my colleague for over 16 years died in August 1908, deeply regretted by the boys and the teachers. He worked with great zeal and ability and died prematurely, after having spent himself in the useful work. Personally I felt the deep loss of a faithful co-worker who stood by me amidst the hopes and fears of the early struggles of the school. He died happy to see his efforts crowned with success. We had again to mourn the untimely death of another good and able teacher who worked for 14 years in charge of the IVth Standard. In spite of failing health, Mr. V. Duraiappah worked strenuously at his post till within a month of his death. A useful life was cut off prematurely....

University Examinations.

Two students took up the Cambridge Junior Local in December 1908 of whom one satisfied the Examiners.

Eight students took up the Cambridge Senior Examination of whom 5 satisfied the Examiners.

Ten students took up the Madras Matriculation Examination of whom 5 passed the Examination in the 2nd Division.

4 students appeared for the Madras F. A. Examination, of whom only one passed in the 2nd Division........"

அன்றும், இச் சபைத் தனாதிகாரி சித. மு. பசுபதிச்செட்டியாரால் இக் கல்லூரிக் களிக்கப்பட்ட கிட்டங்கியின் வாடகைப் பணத்துக்கு வாங்கிய புத்தகங்களும் பரிசுகளாக உதவலாயின. இன்னும் பண்ணோடு தேவாரம் ஓதவல்ல மாணவர்களுக்குப் பரிசு கொடுக்கும்படி ஆசுத்த K. குமாரசுவாமி 50 ரூபா அனுப்பியுள்ளார். அதிகாரசபை அங்கத்தவர்களும் பிற சைவநன்மக்களும் ஒவ்வோர் பரிசு உதவினார்கள். இக்கல்லூரி அக்கிராசனாதிபதி கௌரவ அ. கனகசபை குறிப்புரை கூறியபோது இந்துக் கல்லூரி முக்கிய ஸ்தாபகருள் ஒருவராயும் அதன் தனாதிகாரியாயும் இருந்த சித. மு. பசுபதிச் செட்டியார் இக்கல்லூரிக்காற்றிய சேவைகளைப்பற்றியும் அவரின் அகால மரணத்தால் இக்கல்லூரிக்கு நேர்ந்த பெருங் குறையைப்பற்றியும் உருக்கமாகச் சொல்லி, பின் இக் கல்லூரிக் கட்டடத்திற்கு பொருளுதவிய க. ஞானசேகரம், T. நாகலிங்க முதலியார் ஆதியோரின் பெருந்தன்மையையும் புகழ்ந்து பாராட்டினர். இது இப்படியிருக்க,

### ஐந்தாவது வருஷாந்தக் கூட்டம்.

இந்துக்கல்லூரி அதிகார சபையாரின் ஐந்தாவது வருஷாந்தக் கூட்டம் 1909ஆ ஆவணிமீ 7௳ கூடிற்று.

"The Annual General Meeting of the Board of Directors of the above institution was held in the College Hall on Saturday the 7th inst. (7th August 1909) at 4 P. M.

The members of section B of the Board retired from office and the following gentlemen were re-elected. Messrs. M. Muthukumarasamy, I. I. Mudlr. Tillainadar, S. Kathiresu, M. Sivapragasam and C. W. Chinnappah Pillai.

The following gentlemen were added to the section:- Messrs M Sanmukam, V.S.Ponnampalam, K. Kanakasabai, T. Nagalinga Mudaliar and V. Mudlr. Sittampalam.

The vacancy caused by the transfer of S. Sabaratna Mudlr. was filled up by the election of M. S Ramalingam Mudlr. The office bearers and members of the standing Committee for the previous year were re-elected"

### வரவு செலவு.

1908ஆ ஆடிமீ 1௳ முதல் 09ஆ ஆனிமீ 30௳ முடிய வந்த மாணவர் சம்பளவரவு ரு. 5360 சதம் 69ம், அரசினர் உதவி நன்கொடைப்பணம் ரு 3111ம், ஸ்கலர்சிப் ரு 500ம், சைவநன்மக்கள் உதவிய நன்கொடையால் ரு 5134 சதம் 83½ம், பல சில்லறையால் ரு 230 சதம் 09½ம், ஆக ரு 14336 சதம் 62 ஆனது. இக்காலத்தில் உபாத்தியாயர் வேதனம் ரு 8446 சதம் 14ம், கல்லூரிக் கட்டடத்தில் ரு 1469 சதம் 80ம், பல சில்லறையால் ரு 432 சதம் 43 ஆனது.

—(தொடரும்)

## வெள்ளவத்தை மில்லில் செய்யப்படும் இலங்கா உற்பத்திச் சீலைகளையே வாங்குங்கள்!

அதனுல், எப்போதும், மிகச் சிறந்ததும் மிக மலிவானதும் ஆகிய சீலைகளையும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய எவ்வகைத் துணிகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை முற்றும் நம்புங்கள்

இலங்கையின் நாலுபக்கங்களிலும் நம்மிடம் வாடிக்கையாகப் புடவைகளை வாங்குவோர் பல்லாயிரக் கணக்கானோர் உளர்.

நமது புடவைகள் திறமானவையும் மலிவானவையும் என்பதற்கு அவை ஏராளமாக அழிவதே தக்க சான்றுகின்றது.

1936 - ம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என்னும் நான்கு மாதங்களிலும் பின்வருமாறு நமது புடவைகள் விலைப்பட்டிருக்கின்றன:—

| வேட்டிகளும் சால்வைகளும் | சேலைகள் | டுவீல் துணிகள் | பெட்ஷீட்டுகள் |
|---|---|---|---|
| 1,95,467பீசுகள்; லாங்குளோத்ஸ் 62,777 யார் | 1,9880 பீசுகள்; சேர்ட்டுகள் 1,10,931 யார் | 68,486 பீசுகள்; ஷீட்டுகள் 7,746 யார் | 37,128 பீசுகள்; வேறுவகைத் துணிகள் 12,00,000 யார் |

நம்மிடம் வாடிக்கையாகத் துணிகளை வாங்கி நம்மை ஆதரித்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவதோடு,

இன்னும் அவர்கள் அவ்வாறே ஆதரிப்பார்களெனவும் நம்புகின்றோம்.

### சேலைகள்

பலவிதமான நிறங்களோடு கூடிய தூய வெண்ணிறச்சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-75 லிருந்து ரூ. 2-65வரை யாருக்குத்தக்கபடி

பல்வேறு நிறங்களில் அழியாத சாயமுள்ள சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2 லிருந்து ரூபா 2-90 வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேறுநிறங்களில், பட்டுக்கரைகளையுடைய சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-50 லிருந்து ரூ. 2-50வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேறு தினுசுகளில் பட்டுக்கரைச் சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2-10 லிருந்து ரூ. 4-25வரை. யாருக்குத் தகக்படி

### வேட்டிகள்

பட்டுக்கரை பிளீச்வேட்டி 50× 3½யார் தனித்தனி ரூ 1-45
„ „ 50× 4 யார் தனித்தனி ரூ. 1-55
ஷை வேட்டிகளுக்குப் பொருத்தமானபட்டுக்கரைச் சால்வைகள் 40×2½யார் தனித்தனி 80சதவீதம்
பான்ஸிபிளீச்துட்டிகள் 40×3½யார் தனித்தனி ரூ. 1-10 வீ
„ „ „ 46× 4யார் தனித்தனி ரூ 1-20வீதம்
அவற்றிற்குப் பொருத்தமான பான்ஸி சால்வைகள் 40× 2½யார் தனித்தனி 70 சதவீதம்

### சாரங்கள்

அழகான குறிகளோடு கூடிய புதுத்தினுசுச் சாரங்கள் தனித்தனி 50 சதத்திலிருந்து ரூபா 1-50வரை

### கம்பாயங்கள்

குறிகளுள்ள தினுசுகள் 40 சதத்திலிருந்து ரூபா 250 வரை

### கிரேத் துணிகள்

முசட்டுப்பாவிப்புக்குச் சிறந்தவை; உடைக்குத் திருப்திகரமானவை×; எளிதில் வெள்ளையாகக் கூடியவை; விலைகள் யார் ஒன்றுக்கு 18 சதத்திலிருந்து 50 சதம் வரை.

### லோங்குளோத்ஸ்

வீட்டுப்பாவிப்புக்குள்ள ஒவ்வொரு தேவைக்கும் விலைகள் யார் ஒன்றுக்கு 20 சதத்திலிருந்து 50 சதம் வரை

### பிளீச் பண்ணாத பெட் ஷீட்டுகள்

54, ×80, சோடி ஒன்றுக்கு ரூ. 2-25
72, ×80, „ „ ரூ. 3-10

### பிளீச் பண்ணிய பெட் ஷீட்டுகள்

54, ×80 சோடி ஒன்றுக்கு ரூபா 3-00
72, ×90 „ „ ரூபா 4-00

## சில்லறை வியாபாரக்கடை, பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்

முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

---

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்க்குறிசிறு ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னுண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332, 20-3-36 to 19-9-36)

---

## "NEW ERA SERIES"

OF

**School Text Books**

பாடசாலைகளுக்குரிய புதிய தமிழ் நூல்கள்

### செந்தமிழ்க் கருவூலம் (1—3)

### கதாவாசகம்

முதலியன.

அரசினர் தவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
Hd. Master (Ag.)
R. S. School,
Sainthamaruthu.

இயற்றியவை.
விரைவில் வெளிவரும்.
(Q. 22. 1-5-36—31-7-36). (இ)

---

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பத்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | „ „ | „ | 5-50 |
| ¼ | „ „ | „ | 3-00 |
| 1 | அங்குலம் | „ | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

---

தலைவலியுற்றபோது

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம் தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும் தேயுங்கள்

தலைவலி யுடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில்

இந்தியர்களாலேயே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

Y 44 1-1—31-12-36)

---

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்

நடுவன்மை நாணுபவர்.

---

வான்முகில் வழாதபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, June 22nd 1936.